
வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 04 11.08.2023 வெள்ளிக்கிழமை இதழ் : 244 பக்கங்கள் : 16

## கொக்குத்தொடுவாய்

# மனிதப் புதைகுழி 21இல் அகழப்படும்

முல்லைத்தீவு, ஒகஸ்ட் 11

**கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியை எதிர்வரும் 21ஆம் திகதி அகழ்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இதற்கான செலவினம் 17ஆம் திகதி நீதிமன்றில் உறுதிப்படுத்தப்படும் என்று தெரிய வருகின்றது.**



நேற்றைய தினம் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ரி. பிரதீபன் தலைமையிலான குழு தொல்பொருள் திணைக்களம், சட்ட மருத்துவ அதிகாரி உள்ளிட்ட குழுவினர் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியை நேரில் சென்று பார்வையிட்டனர்.

நேற்றைய தினம் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் மனி தப் புதைகுழி வழக்கு விசாரணைக்கு 15

## ஆறுகால்மடத்தில் சிசுவின் தலை மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக. 11

ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் பகுதியில் சிசு ஒன்றின் தலை வீதியோரத்தில் காணப்பட்டது. நேற்று மாலை காணப்பட்ட இந்தத் தலை, அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

சிசுவின் தலை மீட்கப்பட்ட பகுதிக்கு அண்மையாக கோம்பயன்மணல் இந்து மயானம் உள்ளது. யாழ். போதனா மருத்துவமனையில் பிரசவத்தின் போது - பின்னர் இறக்கும் சிசுக்கள் இந்த மயானத்திலேயே அடக்கம் 15

## பொருளாதார ஆணைக்குழுவை நிறுவுவதற்கு ஜனாதிபதி திட்டம்

கொழும்பு, ஒக. 11

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முதலீட்டுச் சபை மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்புச் சபை ஆகியவற்றுடன் இணைந்து புதிய பொருளாதார ஆணைக்குழு ஒன்றை நிறுவ எதிர்பார்த்துள்ளோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கை தொழிற்சங்க அமைப்பின் 36 ஆவது வருடாந்த மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் 15

## 'அறகலய'வால் ரூ. 56 இலட்சம் சேத இழப்பு!

கொழும்பு, ஒக. 11

காலிமுகத்திடலில் கடந்த வருடம் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தால் (அறகலய) சொத்துகளுக்கு ஏற்படுத்தப்பட்ட சேத மதிப்பு 56 இலட்சம் ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அந்தப் பகுதியிலிருந்த மேசைகள் மற்றும் கதிரைகளுக்கு ஏற்பட்ட சேதம் 14 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய், வாங்குகளுக்கான சேதம் ஒரு இலட்சத்து 62ஆயிரம் ரூபாய், கை கழுவுமிடங்களின் 15

## சிறுமிகள் துஷ்பிரயோகம் குற்றவாளிகளுக்கு கடூழியம்!

### கிளிநொச்சி நீதிமன்று விதித்தது

கிளிநொச்சி, ஒக. 11

14 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்த 30 வயது குற்றவாளிக்கு 10 ஆண்டு கடூழிய சிறை தண்டனையும் 15 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்த 18 வயது குற்றவாளிக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரு வருட கடூழிய சிறை தண்டனையும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்று விதித்தது.

கிளிநொச்சியில் 14 வயது சிறுமியை ஒருவரை அவரின் பாதுகாவலரிடம் இருந்து கடத்தி துஷ்பிரயோகம் செய்த குற்றத்துக்காக 30 15

## பல்கலை. மாணவர்களின் போராட்டம் கலைப்பு!



கொழும்பு, ஒக.11

பல்கலைக்கழக மாணவர்கள் கொழும்பில் நேற்று முன்னெடுத்த போராட்டம் பொலிஸாரால் கலைக்கப்பட்டது.

பல்கலைக்கழகங்களின் மாணவர் சம்மேளனத்தால் நேற்று வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. மூன்று தனியார் பல்கலைக்கழகங்களுக்கு மருத்துவப் பட்டங்களை வழங்குவதை ஆட்சேபித்தும் 15

## பயங்கரவாத சட்டத்தில் 40 பேரே சிறைகளில்!

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஒக. 11

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் 40 பேர் மட்டுமே சிறைகளில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று நீதிமன்றங்கள், சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

திறைசேரிக்குச் சுமை ஏற்படாத வகையில் சிறைச்சாலைகளைப் பராமரிக்கும் சட்ட ரீதியிலான கட்டமைப்பை உருவாக்குவது தொடர் பில் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது ஒரு போதும் சமூகத்தில் கருத்தாடலுக்கு உள்ளாகியுள்ள வகையில் பணம் செலுத்தி தனியான சிறைச்சாலை அறைகளை பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலான நடவடிக்கை அல்ல.

சிறைச்சாலைகளில் தனியார் தொழிற்சாலைகளை நிறுவி அதில் 15

## இந்தியாவுடனான பேச்சு; பகிரங்கப்படுத்த தயார்!

### வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, ஒக. 11

இலங்கைக்கு முதலிடம் என்ற வெளிநாட்டு கொள்கையுடன் நாட்டுக்காக செயல்படுகிறோம். இந்தியாவுடன் பேசப்பட்ட விடயங்கள், கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் ஆகியவற்றை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவையின் அனுமதியுடன் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கலாம் என வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அமர்வின் போது பிரேரணை முன்னறிவித்தல்கள், தினப்பணிகள் வேளையில் 15



வரலாற்று பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 21ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. கொடிச்சீலைக்கான காளாஞ்சி பாரம்பரிய முறைப்படி ஆலயத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டபோது...! (படம் : ஐ.சிவசாந்தன்)

(தொடர்புடைய செய்தி 16ஆம் பக்கத்தில்)

## நிலங்களை அரசுடைமையாக்க ஜனாதிபதியை வலியுறுத்துங்கள்

### மலையக எம்.பிக்களை கோரிய அமைச்சர்

கொழும்பு, ஒக. 11

பெருந்தோட்ட பகுதிகளில் பயன்படுத்தப்படாத நிலங்களை மீண்டும் அரசுடைமையாக்கும் கோரிக்கையை மலையக அரசியல் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் வலியுறுத்த வேண்டும் என பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சர் ரமேஷ் பத்திரண சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற பெருந்தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் தனது உரையில்,

பெருந்தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் துயரங்களை தேசியம் நாடு மற்றும் அடிப்படையில் ஏற்றுக் கொள்ள 15

# இப்படியும் நடக்கிறது

இந்த பதின்மூன்று என்ற வார்த்தையை கொஞ்ச நாட்களுக்கு எழுதுவதில்லை என்று நினைத்தாலும் சிலர் விடுவதாக இல்லை.

இலங்கை அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை அமுல்படுத்துகின்ற விடயம் இப்போது நாடு முழுவதும் பேசுபொருளாகியிருக்கின்றது.

அதனை அமுல்படுத்துவது தொடர்பாக அரசியல் கட்சிகளிடம் ஜனாதிபதி அண்மையில் அவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டிருந்தது வாசகர்கள் அறிந்தது தான்.

ஆனால், இந்த கோரிக்கைக்கு பதில் எழுதியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, 'பதின்மூன்று தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியுமல்ல, தீர்வுமல்ல. தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டியே இனப்பிரச்னையை தீர்க்க ஒரே வழியாகும்' என தெரிவித்துள்ளது.

பதின்மூன்றை அமுல்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி கடந்த புதனன்று உரையாற்றிய ஜனாதிபதியும், 'நாட்டின் வளர்ச்சிக்கும் எதிர்காலத்துக்கும் ஏற்றவகையில் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகும்' என்றுதான் கூறியிருந்தார். இந்தப் பதின்மூன்றின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள மாகாண சபைகள் வடக்கு, கிழக்கில் மாத்திரம் உருவாக்கப்படவில்லை. நாடு முழுவதிலும் ஒன்பது மாகாண சபைகள் இயங்குகின்றன.

இந்த மாகாண சபைகளால் இந்த நாடு ஒரு பெரிய சுமையை சுமக்கின்றது. தேவையற்ற செலவை எதிர்கொள்கின்றது அதனால் அதனை இல்லாமல் செய்யவேண்டும் என்றும் தெற்கில் சிலர் கோரி வருகின்றனர்.

இந்நிலையில், இந்த மாகாண சபைகளால் நாட்டுக்கு பயனில்லை என்றால் அதனை இரத்துசெய்யலாம் என்று முன்னணியினர் கோரியிருந்தாலும் அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு சரியாகப் பதிலளித்திருக்கிறார்கள் என்று கொள்ளலாம். ஆனால், அவர்களோ பதின்மூன்றையும் இனப்பிரச்னை தீர்வையும் எதற்காக ஒன்றாகப் பார்த்தார்கள் என்பது தெரியவில்லை.

பதின்மூன்றுதான் இனப்பிரச்னைக்கு தீர்வு என்று ஜனாதிபதிகூட சொல்லவில்லை.

இது போதாதென்று, இணையத்தளம் ஒன்றில் 'ஈழநாடு'வில் பதின்மூன்றுக்கு ஆதரவாக வெளிவந்த கட்டுரை ஒன்றுக்கு ஒருவர் எதிர்வினையாற்றியிருக்கிறார்.

அந்த இணையத்தில் வெளிவந்த கட்டுரை ஒன்றை பாரிஸிலிருந்து ஒருவர் அனுப்பியிருந்தார். அந்தக் கட்டுரையில் வந்த ஒரு முக்கியமான பகுதியை கீழே தருகின்றேன்.

'இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் நீட்சியான 13ஆவது திருத்தச்சட்டம். அது ஒரு தலைப்பட்சமாக உருவாக்கப்பட்ட 1987 - 1988ஆம் ஆண்டுகாலப்பகுதியிலேயே ஒட்டுமொத்த தமிழ் மக்களாலும், தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளாகவிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளாலும் அன்றே நிராகரிக்கப்பட்டிருந்த வரலாறு இன்றும் தமிழ் மக்களிடையே உயிர்ப்புடனேயே இருக்கிறது. 13ஆவது திருத்த சட்டத்தை வைத்து, தமிழ் மக்களின் ஆகக் குறைந்த அரசியல் தீர்வுக்காக வேனும் ஒரு துரும்பைக்கூட நகர்த்த முடியாது என்ற பட்டறிவின் தீர்க்கதரிசனம், 1988இல், இதே 13ஆவது திருத்தத்தின் முறைப்படி எதையும் சாதிக்க முடியாது என்று, இலங்கை - இந்திய பேரினவாத சக்திகளால் வடக்கு - கிழக்கு முதலமைச்சராக்கப்பட்ட அ. வரதராஜப்பெருமாளே தன்னிலைவிளக்கம் கொடுத்துவிட்டு, பதவி துறந்து இந்தியாவுக்கு தப்பிச்சென்ற வரலாறு முன்மொழிய தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் வட மாகாண முதலமைச்சராக பதவி சுகத்தை அனுபவித்து ஓய்ந்த விக்னேஸ்வரன் வழிமொழிய இன்றும் நிலையாக தொடர்கிறது.'

இதுதான் அந்தக் கட்டுரையின் சாராம்சம். முதலாவது வரதராஜப்பெருமாள், இந்த பதின்மூன்றால் ஒரு பயனுமில்லை என்று எந்தக் கட்டத்திலும் சொல்லவில்லை. அதேபோல விக்னேஸ்வரனும் அதனை முழுமையாக நிராகரிக்கவில்லை.

அதுவல்ல நாம் சொல்லவருவது.

பதின்மூன்றாவது திருத்தத்தையும் மாகாண சபைகளையும் விடுதலைப் புலிகள் முற்றாக நிராகரித்தார்கள். அதனால் அதனை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார் அந்த கட்டுரையாளர். அவரின் கோரிக்கை நியாயமானதுதான்.

இதன்மூலம் அவர் எதனைச் சொல்ல வருகிறார் என்றால், விடுதலைப் புலிகள் நிராகரித்த பதின்மூன்றை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத்தான்.

ஆனால், நோர்வேயின் அனுசரணையுடன் நடைபெற்ற புலிகள் - இலங்கை அரச பேச்சின் முடிவில் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் வைத்து வெளியிடப்பட்ட பிரகடனத்தில் சமஷ்டிக் கட்டமைப்புக்கு இலங்கை அரசு சம்மதம் தெரிவித்த போதும் விடுதலைப் புலிகள் அதனை நிராகரித்திருந்தனர். புலிகள் நிராகரித்த சமஷ்டி கட்டமைப்பையும் தமிழ் மக்கள் நிராகரிக்கவேண்டும் என்றே அந்த கட்டுரையாளர் சொல்வதாக் கொள்ளலாம். அப்படியெனில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இன்று புலிகளின் விருப்பத்துக்கு மாறான ஒரு தீர்வையே கோரி நிற்கிறார்கள் என்று கொள்ளலாமோ?

**- ஊர்க்குருவி.**

# விவசாயிகளுக்கு இலவசமாக யூரியா

யாழ்ப்பாணம்,ஓக. 11

ஜப்பானிய அரசாங்கத்தின் நிதியுதவியில் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஊடாக யாழ். மாவட்டத்தில் சிறியளவில் நெல் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இலவசமாக யூரியா உரம் வழங்கப்பட்டது.

சாவகச்சேரி கமநல சேவைகள் திணைக்களத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிஸூகோஷி ஹிடோகி, வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாயம் அமைப்பின் இலங்கை - மாலைதீவுகளுக்கான வதிவிடப் பிரதிநிதி விஜேந்திர சரண், யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளர் பிரணவன் தெய்வநாயகி ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இதன் போது சாவகச்சேரி கமல சேவைகள் திணைக்களத்துக்குட்பட் 2 ஆயிரத்து 777 சிறிய விவசாயிகளுக்கு 25 கிலோ நிறை கொண்ட 3 ஆயிரத்து 774 யூரியா உரப் பொதிகள் வழங்கப்பட்டன.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வழங்கவென 25 கிலோ எடை கொண்ட 19 ஆயிரத்து 973 யூரியா பொதிகள் வழங்கப்பட்டன.

(ஐ-03)

# பெண் உட்பட இருவர் மீது மன்னாரில் வாள்வெட்டு!

மன்னார், ஓக. 11

மன்னாரில் இலுப்பக்கடவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூன்றாம்பிட்டிப் பகுதியில் இளைஞர் ஒருவரும் பெண்ணொருவரும் வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதுடன், காயமடைந்தவர்கள் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

பின்னர், காயமடைந்தவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாலியாறு பகுதியைச் சேர்ந்த 50 வயதான பெண்ணும், 27 வயதான ஆணுமே சம்பவத்தில் காயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், தாக்குதல் தொடர்பில் பாலியாறு பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர்கள் நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(அ)

# அரச நிறுவனங்களின் நிதி அறிக்கை இன்னும் இறுதி செய்யப்படவில்லை!

கொழும்பு, ஓக. 11

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதி திட்டத்தின் ஒரு பகுதியாக, அரச நிறுவனங்களின் நிதி அறிக்கைகள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை என வெரைட்டி ரிசேர்ச் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கைகள் கடந்த ஜூன் இறுதிக்குள் வெளியிட்டிருக்க வேண்டும் என அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

நிதியமைச்சால் அடையாளம் காணப்பட்ட 52 பிரதான பொது நிறுவனங்களில் 11 நிறுவனங்கள் ஜூன் 30 ஆம் திகதி வரையான நிதி அறிக்கையை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட கடன் வசதியின் முதல் மதிப்பாய்வை செப்ரெம்பர் மாதம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை இணங்கிய கட்டுப்பாடுகள் தொடர்பில் கடந்த 31ஆம் திகதி நிறைவேற்றப்படவிருந்த 35 வீதமான வாக்குறுதிகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# பொலிஸில் சரணடையத் தயார்! இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத்

கொழும்பு, ஓக. 11

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் இரும்புகள் களவாடப்பட்டு விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் தான் எந்த வேளையிலும் பொலிஸாரிடம் சரணடையத் தயார் என இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் சி.ஐ.டியின் முன்னிலையில் செல்வேன். அதன் காரணமாக பொலிஸார் என்னைக் கைது செய்யலாம். ஒரு பாராளுமன்ற உறுப்பினரைக் கைதுசெய்வதற்கு சபாநாயகரின் அனுமதி தேவை என்பதால் அதனை வழங்குமாறு சபாநாயகரை கேட்டுக் கொள்கின்றேன்-என்றார்.

இதேவேளை, இராஜாங்க அமைச்சர் சரணடைய முன்வந்துள்ளதால் அவரை கைது செய்யலாம் என பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவித்தார்.

(அ)

# இலங்கையில் முதலிட சிறந்த தருணம் இதுவே



கொழும்பு, ஓக. 11

இலங்கை சரியான பாதையில் சென்று கொண்டிருப்பதாகவும், நாட்டில் முதலீடு செய்வதற்கு இதுவே சிறந்த தருணம் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கடன் நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சியை அடைவதற்கு அரசாங்கம் சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருவதாகவும், எனவே முதலீட்டாளர்கள் இலங்கை சந்தையைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் சென்னையில் நடைபெற்ற "இன்வெஸ்ட் சிறீ லங்கா" மன்றத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

முதலீட்டு வாய்ப்புகளை வெளிப்படுத்துவதன் மூலம் இலங்கை பங்குச் சந்தையில் வெளிநாட்டு போர்ட்ஃபோலியோ முதலீட்டை ஊக்குவிப்பதற்காக பங்குதாரர்களுடன் இணைந்து கொழும்பு பங்குச் சந்தை இந்த மன்றம் ஏற்பாடு செய்தது.

பொருளாதாரத்தின் அடிப்படை கட்டமைப்பு பலவீனங்களை நிவர்த்தி செய்யும் வகையில் ஆழமான பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டு இலங்கை பலப்படுத்தப்படும்.

பொருளாதார ஸ்திரமின்மைக்கான முக்கிய காரணங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு தேவையான சீர்திருத்தங்கள் நிறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஊழல் தடுப்புச் சட்டம், பாராளுமன்ற பட்ஜெட் அலுவலகம், புதிய மத்திய வங்கிச் சட்டம் போன்ற புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தி, நிதி நிர்வாகத்தில் தேவையான சுதந்திரம், வெளிப்படைத் தன்மை மற்றும் நல்லாட்சி ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
11.08.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சிங்கள தேசியவாதத்தின் மீள் எழுச்சி

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான ரணிலின் அறிவிப்புகள் சோர்வடைந்திருந்த சிங்கள தேசியவாத சக்திகளை உற்சாகப்படுத்தியிருக்கின்றதா? கோட்டாபய ராஜபக்ஷவின் வீழ்ச்சியை தொடர்ந்து சிங்கள தேசியவாதம் வீழ்ச்சியடைந்து விட்டதாகவே பலரும் கூறினர். தென்னிலங்கையை சேர்ந்த அரசியல் சிந்தனையாளர்கள் சிலர், கோட்டாபயவின் வீழ்ச்சியை சிங்கள தேசியவாதத்தின் இறுதிக்கட்டமென்றுகூட வர்ணித்திருந்தனர்.

ஆனால், நிலைமைகள் அதற்கு தலைகீழாகவே இருக்கின்றன. 13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளவற்றை முழுமையாக அமுல்படுத்த வேண்டாமென்னும் சுலோகத்தை முன்வைத்து, தங்களை மீளவும் ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கான முயற்சிகளில் சிங்கள கடும்போக்கு வாதிகள் தங்களை ஒருங்கிணைத்து வருகின்றனர். இந்தப் பின்புலத்தில்தான் ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் டயஸ் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிரான கட்சிகளை ஒன்றிணைப்பதற்கான மகாநாடு ஒன்றை ஏற்பாடு செய்திருக்கின்றார். ஓர் இராணுவத் தளபதி 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு எதிராக களமிறங்குவது சாதாரணமாக எடுக்கக்கூடிய விடயமல்ல.

கோட்டாபய ராஜபக்ஷவை அதிகாரத்துக்குக் கொண்டுவருவதில் அனைத்து சிங்கள தேசியவாத தரப்புகளும் ஒன்றுபட்டிருந்தன. இந்த பின்புலத்தில்தான் கோட்டாபய தனிச்சிங்கள வாக்குகளில் வெற்றிபெற்றிருந்தார். இதன் மூலம் தங்களின் விருப்பங்கள் அனைத்தையும் கோட்டாபயவின் மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்னும் திட்டமே சிங்கள- பௌத்த சக்திகளிடம் இருந்தது. கோட்டாபயவும் சிங்கள கடும்போக்கு பௌத்த தேசியவாத தரப்புகளை மட்டும் திருப்திப்படுத்தும் திட்டங்களுக்கான அறிவிப்புகளையே வெளியிட்டிருந்தார். தன்னையொரு பௌத்த - சிங்களத் தலைவன் என்றும் பிரகடனம் செய்தார்.

புதிய அரசியல் யாப்பொன்றை கொண்டுவருவதன் ஊடாக 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு முற்றுப்புள்ளியிடுவதுடன் அதன்மூலம் உறுதிப்படுத்தப்பட்ட அதிகாரங்களையும் தமிழ் மக்களுக்கு வழங்கக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். மாவட்ட சபை முறைமை தொடர்பில் சிந்தித்தார். இந்த அடிப்படையிலேயே புதிய அரசியல் யாப்புக்கான ஆலோசனைக் குழுவை நியமித்தார். அந்தக் குழுவில் இருந்தவர்களில் பெரும்பான்மையினர் 13ஆவது திருத்தச் சட்டம் நாட்டுக்கு பயனற்றதென்னும் நிலைப்பாட்டை கொண்டிருந்தவர்களாவர்.

ஆனால், எதிர்பாராத வகையில் கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்திலிருந்து வெளியேறும் நிலைமை உருவாகியதைத் தொடர்ந்து, சிங்கள - பௌத்த தேசியவாத தரப்புகளின் எதிர்பார்ப்புகள் தோல்வியடைந்தன. இந்த நிலையில்தான், தங்களின் திட்டங்கள் அனைத்தும் இடைநடுவில் நின்றுவிட்ட ஆவேசத்தில் இருந்தவர்கள் அனைவரும், தற்போது 13ஆவது திருத்தச் சட்டத்தை முன்வைத்து தங்களை ஒருங்கிணைத்துக் கொள்ளவும் வீழ்ச்சியடைந்த சிங்கள தேசியவாத சக்திகளை அதிகாரத்துக்குக் கொண்டுவரவும் முயற்சிக்கின்றனர். ரணிலின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான அறிவிப்பை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள முயற்சிக்கின்றனர்.

சிங்கள - பௌத்த தேசியவாத தரப்புகளின் 13இன் மீதான எதிர்ப்பு என்பது ஒரே நேரத்தில் மூன்று வகையான எதிர்ப்புகளுக்கான கருவியாக பயன்படுத்தப்படுகின்றது. முதலில் - தமிழர் விரோதம், இரண்டாவது - இந்திய எதிர்ப்பு, மூன்றாவது - ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்துக்கு வருவதை எதிர்ப்பது. சிங்கள - பௌத்த தேசியவாத தரப்புகளை பொறுத்தவரையில் ரணில், அவர்களின் விருப்பத்துக்குரிய ஒருவரல்ல. ஒரு வேளை, ரணில் வெற்றிபெற்றாலும்கூட ஒரு கட்டத்துக்கு மேல் அவர் நகர்வதை தடுப்பதற்கு சிங்கள - பௌத்த தேசியவாத அரசியல் தரப்புகள் பாராளுமன்றத்தில் பலமாக இருக்க வேண்டும். அப்போதுதான் தங்களது விருப்பங்களை பாதுகாக்க முடியும். இதற்கு பலம் சேர்க்கும் விடயமாகவே, சிங்கள - பௌத்த தரப்புகள் 13ஆவது திருத்தச் சட்டத்தை கையிலெடுத்திருக்கின்றனர்.

# ஆசிரியர் அறைந்ததில் பாதிக்கப்பட்ட மாணவன் மருத்துவமனையில் சேர்ப்பு

*யாழ்ப்பாணம், ஓக. 11*

*ஆசிரியரின் தாக்குதலுக்கு இலக்கான மாணவனின் முக நரம்புகள் பாதிக்கப்பட்ட நிலையில் மாணவன் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.*

*மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவனுக்கு ஆசிரியர் முகத்தில் கைகளால் அறைந்துள்ளார்.*

*அதனால், முகத்தில் கடும் வலி ஏற்பட்ட நிலையில் மாணவனை பெற்றோர் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்த போது, மாணவனின் முகத்தில் உள்ள நரம்புகள் பாதிக்கப்பட்டமை மருத்துவர்களால் கண்டறியப்பட்டு மாணவனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.*

*சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு மருத்துவமனை ஊடாக அறிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)*

# ஓவியர் ஆசை இராசையா நினைவாக கலைநிகழ்வுகளும் கண்காட்சியும்!

*யாழ்ப்பாணம், ஓக. 11*

*ஓவியர் ஆசை இராசையாவின் 77ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு 'பிரம்மம்' என்ற தலைப்பிலான நினைவுகூரல் நிகழ்வு மற்றும் ஓவியக் கண்காட்சி என்பன எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளது.*

*ஓவியர்களையும் ஓவியக் கலையையும் கொண்டாடும் விழாவாக இந்தநிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழக நுண்கலைத்துறைப் பேராசிரியர் தா. சனாதனன் தலைமையில் நடைபெறும் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு கட்புலக் கலைகள் மற்றும் நிகழ்த்து கலைகள் பல்கலைக்கழகப் பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர கலந்து சிறப்பிக்கவுள்ளார்.*

*பேராசிரியர் சரத்சந்திர ஜீவாவால் வடிவமைக்கப்பட்ட ஓவியர் ஆசை இராசையாவின் உருவச்சிலையும் வைபவரீதியாக கையளிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படவுள்ளது.*

*கவிஞர் சோ. பத்மநாதன், விரிவுரையாளர் ஓவியர் பி. பிரசாந், ஆகியோரும் நிகழ்வில் வெவ்வேறு கருப் பொருளில் உரையாற்றவுள்ளனர்.*

*சிரேஷ்ட விரிவுரையாளர் சி. ரமணராஜா நினைவுப் பேருரையியை ஆற்றவுள்ளார். ஓவியர் ஆசை இராசையாவின் வாழ்க்கையை மையப்படுத்திய நடன ஆற்றுகை ஆசிரியர் எஸ். சிறீகண்ணனின் நெறியாள்கையில் நடைபெறவுள்ளது.*

*அத்துடன், காயத்ரியின் நெறியாள்கையில் அவருடன் இனணந்து ராகவி பங்குபெறும் பரதம் மற்றும் யோகாவின் தெய்வீக இணைப்பு என்ற ஆற்றுகையும் நடைபெறவுள்ளன.*

*இதனைத் தொடர்ந்து கண்காட்சி நடைபெறும். சித்திர பாடத்தைப் பயிலும் மாணவர்களுக்கு இந்நிகழ்வு பெரிதும் உதவும் வகையில் இந்தக் கண்காட்சி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (ஐ)*

# திருவள்ளுவர் தினவிழா

*யாழ்ப்பாணம், ஓக. 11*

*அகில இலங்கை திருவள்ளுவர் மகா சபை முன்னெடுக்கும் திருவள்ளுவர் தின விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நாராயணா சனசமூக நிலைய பொன்விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.*

*மகா சபையின் தலைவர் நா. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் வித்தியாலய ஆசிரியர் செ. பதீஸ்ராஜா கலந்து கொள்ளவுள்ளார்.*

*சிறப்பு விருந்தினர்களாக பரதகலா வித்தகர் திருமதி ச. லிசாந்தினி, யாழ்ப்பாணம் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ப. உசா, சமூக செயல்பாட்டாளர் அ. சதுஸ்திகா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.*

*நிகழ்வில் கருத்துரையை அரியாலை கனகரத்தினம் மகா வித்தியாலய ஆசிரியர் சி. கர்ணன் வழங்குவார்.*

*தொடர்ந்து நிகழ்வில் நடனம், நாட்டிய நாடகம், பட்டிமன்றம் போன்ற கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. (ஐ-ரி)*

# நாய்களுக்கு தடுப்பூசி!

*யாழ்ப்பாணம், ஓக. 11*

*யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையால் கொழும்புத்துறை பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்க்கு எதிரான தடுப்பூசி (ஏ. ஆர். வி.) ஏற்றும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் நடைபெறவுள்ளது.*

*இதில், காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை ஏ. வி. வீதி, புகையிரத வீதி சந்தியிலும் மு. ப. 11 மணி முதல் மதியம் ஒரு மணி வரை கொழும் புத்துறை விதானையார் லேனிலும் பிற்பகல் 2.30 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை பாசையூர் ச.ச. நிலை யத்திலும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி வழங்கப்படும். (ரி)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஓகஸ்ட் - 11 வெள்ளிக்கிழமை**
**சோபகிருது வருடம் - ஆடி 26**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 09.00 - 10.30 |
| ராகு காலம் | : | 10.30 - 12.00 |
| திதி | : | ஏகாதசி |

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
இதுவரை இருந்த சோர்வு களைப்பு யாவும் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும்.வியாபாரம் சூடு பிடிக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். மறதியால் பிரச்னை வந்து நீங்கும். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**கடகம்**
எந்த பிரச்னையையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். அரசாங்க விஷயம் நல்ல விதத்தில் முடியும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் அதிகரிக்கும். சூட்சுமங்களை உணர்வீர்கள்.

**சிம்மம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். மதிப்புக் கூடும் நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டே இருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு. திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
கடினமான காரியங்களை எளிதாக முடிப்பீர்கள். சகோதரவகையில் ஒற்றுமை பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும்.

**தனுசு**
பணப்புழக்கம் அதிகரிக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். தலைமைக்கு நெருக்கமாவீர்கள்.

**மகரம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள்.உறவினர்களில் உண்மையானவர்களை வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். கனவு நனவாகும்.

**கும்பம்**
எதிர்ப்புகளை தாண்டி முன்னேறுவீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். உத்தியோகத்தில் சகஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**மீனம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும்.

# சிலப்பதிகாரம் குறிப்பிடுவது தமிழரையே; திராவிடரை அல்ல!

## நிதி அமைச்சர் நிர்மலா

புதுடில்லி, ஓக. 11

“சிலப்பதிகார வழியில் பிரதமர் மோடி ஆட்சி நடத்துகிறார். சிலப்பதிகாரம் ‘தமிழர்கள்’ என்றுதான் சொல்கிறது. அதில் ‘திராவிடர்கள்’ என சொல்லப்படவில்லை” என்று தி. மு. கவுக்கு பதிலளிக்கும் வகையில் மக்களவையில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசினார்.

பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் கடந்த ஜூலை 20ஆம் திகதி தொடங்கியது. மணிப்பூர் விவகாரத்தில் பிரதமர் மோடி அறிக்கை தாக்கல் செய்ய வலியுறுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வந்தனர். இதனிடையே, மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் ‘இந்தியா’ கூட்டணி சார்பில் மக்களவையில் நம்பிக்கை இல்லா தீர்மான பிரேரணை கொண்டுவரப்பட்டது.

இந்த தீர்மானத்தின் மீதான விவாதம் நேற்று முன்தினம் தொடங்கியது. இந்நிலையில், மக்களவையில் நேற்று, நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீதான விவாதத்தில், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் உரையாற்றினார்.

ஜல்லிக்கட்டு விளையாட்டின் மீதான தடை என்பது காங்கிரஸ் - தி. மு. க. கூட்டணி ஆட்சியில் அமுலுக்கு வந்தது. அந்தத் தடையை நீக்கி தமிழ் பாரம்பரியத்தை காப்பாற்றியவர் பிரதமர் நரேந்திர மோடி.

சிலப்பதிகார வழியில் பிரதமர் மோடி ஆட்சி நடத்துகிறார். சிலப்பதிகாரம் தமிழர்கள் என்றுதான் சொல்கிறது. அதில் திராவிடர்கள் என சொல்லப்படவில்லை. செங்கோலை பிரதமர் மோடி மக்களவையில் வைத்தால், அதை ஏற்க முடியாது. 10இற்கும் மேற்பட்ட மேற்கோள்களை புறநானூறு மற்றும் திருக்குறளில் இருந்து பிரதமர் மோடி மேற்கோள் காட்டி பேசியுள்ளார். காசியில் தமிழ் சங்கமம் நடத்தப்பட்டுள்ளது” என்றார் நிர்மலா சீதாராமன்.

# தி. மு. கவின் குரலை கேட்டாலே பா. ஜ. க. அரசு நடுங்குகின்றது!

சென்னை, ஓக. 11

பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் தி. மு. கவினரின் குரலைக் கேட்டால், பா. ஜ. க. அரசு நடுங்குகிறது. அந்த நடுக்கம், அவர்களின் கட்சி நிகழ்வுகளிலும் எதிரொலிக்கிறது. தலைவர் கருணாநிதியின் வார்ப்புகள் அப்படி” என்று தி. மு. க. தொண்டர்களுக்கு, அக்கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான மு. க. ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்தக் கடிதத்தில், “இந்தியாவின் தலைநகரிலும் பிற மாநிலங்களிலும் நம் தலைவர் கருணாநிதியால் கட்டிக் காக்கப்பட்ட தி. மு. கவின் பெயரைக் கேட்டால் அரசியல் எதிரிகள் அலறுகிறார்கள். நாட்டின் பிரதமர், தான் கலந்து கொண்ட மத்திய பிரதேசம் மற்றும் அந்தமான் நிகோபர் நிகழ்ச்சிகளில் தி. மு. க. மீது தேவையின்றி விமர்சனம் வைக்கின்றார். பாராளுமன்றத்தில் பாஜக அரசு மீது ‘இந்தியா’ கூட்டணி கொண்டு வந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது ஆணித்தரமான வாதங்களை அடுக்கிப் பேசினார் காங்கிரஸ் கட்சியின் இளம்தலைவர் ராகுல் காந்தி.

மணிப்பூர், ஹரியானவில் நடக்கும் கொடூரங்கள் குறித்த அவருடைய வாதங்களுக்கு பதில் சொல்ல முடியாத ஒன்றிய பா. ஜ. க. அரசின் அமைச்சர் ஸ்மிருதி இரானி, தன் பேச்சில் தி. மு. க. மீது அவதூறு சுமத்தி, திசை திருப்பும் வேலையைச் செய்ய நினைத்தார்.

பா. ஜ. க. அல்லாத கட்சிகள் ஆளும் மாநிலங்கள், பா. ஜ. கவின் மிரட்டலுக்கு அடிபணியாத கட்சிகள் இவற்றைக் குறி வைப்பதற்காகத்தானே அமலாக்கத் துறை, சி. பி. ஐ, வருமான வரித் துறை உள்ளிட்டவற்றை பாஜக அரசு தன் கைப்பாவையாக பயன்படுத்தி வருகிறது. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினரைப் பார்த்து, “எங்களை எதிர்த்தால் உங்கள் வீட்டுக்கு அமலாக்கத்துறை வரும்” என்ற வகையில் பேசிய அமைச்சரை ஒரு சில நாட்களுக்கு முன் நாடு பார்த்தது.

தி. மு. க. இத்தகைய மிரட்டல்களுக்கும் பூச்சாண்டிகளுக்கும் பயந்து ஒதுங்குகிற இயக்கம் அல்ல. மக்களவையில் கட்சியின் பொருளாளர் டி. ஆர். பாலுவும், மாநிலங்களவையில் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி சிவாவும் ஒன்றிய பா. ஜ. க. அரசின் மக்கள் விரோதச் செயல்களை அம்பலப்படுத்திப் பேசியிருக்கிறார்கள் - என்றும் கூறியுள்ளார்.

(ஐ)

### என். எல். சி. திட்ட பாதிப்புகள்

# மத்திய, மாநில அரசுகள் ஆய்வு செய்ய வேண்டும்

## பா. ம. க. வலியுறுத்து



சென்னை, ஓக. 11

என். எல். சி. நிறுவனத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மத்திய, மாநில அரசுகள் சென்னை ஐ. ஐ. டி. மூலம் ஆய்வு நடத்த முன் வர வேண்டும் என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

கடலூர் மாவட்டத்தில் என்எல்சி, பரங்கிப்பேட்டை தனியார் அனல் மின் நிலையம் பகுதிகளில் பூவுலகின் நண்பர்கள், மந்தன் அத்யயன் கேந்திரா ஆகிய தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்ட ஆய்வில், 31 இடங்களில் 17 இடங்களில் நிலத்தடி நீரின் தரம் மிகக் கடுமையாகவும், 11 இடங்களில் குறிப்பிடத்தக்க அளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

வடக்கு வெள்ளூர் கிராமத்தில் நிலத்தடி நீரில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட 250 மடங்கு அதிகமாக பாதரசம் கலந்திருப்பது தெரியவந்துள்ளது. ஆய்வு நடத்தப்பட்ட 90 சதவீத வீடுகளில் உள்ளவர்களில் எவரேனும் ஒருவருக்கு சிறுநீரகம் தோல் மூச்சுத்திணறல் போன்ற பாதிப்புகள் ஏற்பட்டிருக்கிறது உறுதியாகியுள்ளது. என்எல்சி நிறுவனம் எத்தகைய தீமைகளை ஏற்படுத்தி வருகிறது என்பதற்கு இதுவே சான்று.

இனியும் தாமதிக்காமல் சென்னை ஐ. ஐ. டி. மூலம் ஆய்வு நடத்த மத்திய, மாநில அரசுகள் முன் வரவேண்டும். என்எல்சியால் பாதிப்பு ஏற்பட்டது ஆய்வில் உறுதி செய்யப்பட்டால் அந்நிறுவனத்தை உடனடியாக வெளியேற்ற வேண்டும் - என்றுள்ளது.

(ஐ)

# குருந்தூர்மலை பொங்கலை ஜனாதிபதி நிறுத்தவேண்டும்

## சரத் வீரசேகர எச்சரிக்கை

**கொழும்பு, ஓக. 11**

**முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் பொங்கல் நிகழ்வை நடத்த முல்லைத்தீவு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ள நிலையில், இந்த நிகழ்வை ஜனாதிபதி உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர வலியுறுத்தினார்.**

**பாராளுமன்றில் நேற்று முன் தினம் இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார வீழ்ச்சிக்கு நாம் முகம் கொடுத்துள்ள நிலையில், இதனைப் பயன்படுத்தி தமிழ் அரசியல்வாதிகள் பிரிவினைக்கு முற்படுகிறார்கள்.

குருந்தூர்மலை என்பது வடக்கிலுள்ள பௌத்த மத்தியஸ் தலமாகும். இதனை புராதனச் சின்னமாக அடையாளப்படுத்த நடவடிக்கை எடுத்தபோது, தமிழ் அடிப்படைவாதிகள் இதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தார்கள்.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி அதற்கிணங்க, இந்த செயற்பாடுகளை இடைநிறுத்தியுள்ளார். இந்தநிலையில், சில குண்டர்கள் அங்கு நுழைந்து புராதனச் சின்னத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்பட்டுள்ளார்கள்.

அதிகாரிகளுக்கு மரண அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டுள்ளது. எமது நாட்டில் பல கோயில்கள் உள்ளன. பௌத்தர்களும் அங்கு சென்று வழிபடுகிறார்கள்.

எனினும், எந்தவொரு கோயிலுக்கும் சென்று புத்தர் சிலையை வைத்து, பிரித் ஓதி பௌத்தர்கள் வழிபடுவதில்லை.




ஆனால், முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் பொங்கல் நிகழ்வை நடத்த முல்லைத்தீவு நீதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

இந்து அடிப்படைவாதிகளுக்கு நீதிபதி இவ்வாறு தொடர்ந்தும் அனுமதி வழங்கிக் கொண்டிருக்கிறார்.

விகாராதிபதியையும் நீதிமன்றுக்கு அழைக்காமல்தான் இவ்வாறான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இது பௌத்தர்களின் மனங்களை புண்படுத்தும் செயற்பாடாகும். இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் நாம் தானா இனவாத- மதவாத பிரச்னைகளுக்கு காரணம்?

அல்லது பௌத்த வழிபாட்டுஸ்தலம் ஒன்றில் பொங்கல் நிகழ்வை நடத்த அனுமதி வழங்கிய சட்டத்தரணி உள்ளிட்ட நீதிபதியா காரணம் என கேட்க விரும்புகிறேன்.

இந்த செயற்பாடு தொடர்பாக அவதானம் செலுத்தி, உடனடியாக இந்தநிகழ்வை நிறுத்த வேண்டும் என்று ஜனாதிபதி உள்ளிட்ட அதிகாரிகளிடம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

வடக்கில், பௌத்த சின்னங்களை அழிக்கும் பல செய்றபாடுகள் தொடர்ச்சியாக அரங்கேறி வருகின்றன.

காணி அதிகாரம் இல்லாமலேயே இவ்வாறு இடம்பெறுகிறது என்றால், காணி அதிகாரம் கிடைத்துவிட்டால் எப்படி இருக்கும்?

இந்த பௌத்தச் சின்னங்கள் பௌத்தர்களுக்கு மட்டுமன்றி, நாட்டிலுள்ள அனைவருக்கும் உரித்தானது என்று நினைக்காத அடிப்படைவாத அரசியல்வாதிகள் இருக்கும்வரை, 13 தொடர்பாக நாம் கதைக்கக்கூட தயாரில்லை-என்றார்.

(அ)

# ரோசியின் உத்தியோகபூர்வ இல்ல மின்சாரம் துண்டிப்பு

## ஆறு இலட்சம் ரூபா நிலுவை

கொழும்பு, ஓக. 11

நான்கு மாதங்களாக மின்சாரக் கட்டணம் செலுத்தப்படாததால், கொழும்பு முன்னாள் மேயர் ரோசி சேனாநாயக்கவின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி முதல் இதுவரை ஆறு இலட்சம் ரூபா மின்சாரக் கட்டணம் செலுத்தத் தவறியுள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதற்கமைய, கடந்த எட்டாம் திகதி முன்னாள் மேயர் அலுவலகத்துக்கு சென்ற மின்சார சபை அதிகாரிகள் மின்சாரத்தை துண்டித்தனர்.

அவர் பதவியில் இல்லாதிருந்தும், மேயர் இல்லத்தில் தங்கியிருந்ததால் இக்கட்டணத்தைச் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, கடந்த 08ஆம் திகதி காலை தெஹிவளை - கல்கிஸை மாநகர சபைக்கான மின்சாரமும் துண்டிக்கப்பட்டது.

ஜூன் மாதம் தொடர்பான கட்டணப் பட்டியல் உரிய நேரத்தில் கிடைக்காததால், இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் குறிப்பிட்டார்.

இலங்கை மின்சார சபை மின்னஞ்சல்கள் மூலம் கட்டண பட்டியல்களை அனுப்புவதாகவும், தவறான மின்னஞ்சல் முகவரியினால் உரிய நேரத்தில் மின் கட்டணப் பட்டியல் கிடைக்கவில்லையெனவும் அவர் கூறினார் .

இது தொடர்பாக இலங்கை மின்சார சபையிடம் தனது அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி அதனை செலுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்தார்.

(அ)

# அச்சுவேலி கடற்கரையில் நீரில் மூழ்கி ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 11

அச்சுவேலி அக்கரை கடற்கரையில் நீரில் மூழ்கிய நிலையில் ஒருவரின் சடலம் நேற்று முன் தினம் புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

கெருடாவில் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி சிவராசா (வயது-75) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

மரண விசாரணை அதிகாரி சடலத்தை பார்வையிட்ட பின்னர் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர் (அ-2)

# தாய்நாட்டை காட்டிக்கொடுக்க ஒருபோதும் இணங்கமாட்டோம்

## சபையில் கூறினார் பெரமுனவின் எம்.பி.

கொழும்பு, ஓக. 11

கட்டுப்பணத்தை பெற்று தேர்தலை நடத்தாமல் இருக்கும் நிலையில், உங்களது அதிகாரப் பகிர்வு என்ன?. யாருக்காக அதிகாரங்களை பகிரப் போகிறீர்கள்? உங்களது எதிர்கால ஜனாதிபதி கனவுக்காக எமது தாய் நாட்டைக் காட்டிக்கொடுக்க நாங்கள் இணங்கமாட்டோம் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க பாராளுமன்றத்தில் கூறினார்.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் எப்படி நிறைவேற்றப்பட்டது என்பது ஜனாதிபதிக்கு நினைவில் உள்ளதா எனவும் அவர் கேட்டார்.

வேறு ஒரு நாட்டுக்கு எமது நாட்டின் பிரச்னையை தீர்க்க முடியாது என ஜனாதிபதி கூறினார். 13ஆவது திருத்தச் சட்டம் எப்படி நிறைவேற்றப்பட்டது என்பது உங்களுக்கு நினைவில் இருக்குமோ தெரியாது.

வேறு ஒரு நாட்டில் தயாரிக்கப்பட்டு எமது நாட்டின் மீது சுமத்தப்பட்ட திருத்தச்சட்டத்தை தோளில் தூக்கி சுமக்கின்றீர்கள்.

69 லட்சம் மக்களின் ஆணை என்பது 2017 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட ஒருமித்த நாடு அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிரானது அல்லவா?. ஜனாதிபதி இந்த மக்கள் ஆணைக்கு எதிராக செயற்பட்டு வருகிறார்.

நாட்டு மக்களின் ஆணையில் தோற்கடிக்கப்பட்ட அரசியலமைப்பை தோளில் தூக்கிக் கொண்டு வரவேண்டாம்.

மக்கள் ஆணைக்கு ஏதுவாக பாராளுமன்றத்தின் இணக்கத்துடன் அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றை உருவாக்கினால், அது வேறு கதை.

அத்துடன் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்து, இன ரீதியான அடிப்படையில் செயற்படுவது குறித்து வெட்கப்படுகின்றேன்.

தற்போது முஸ்லிம் இன அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என பாராளுமன்றத்தில் கேட்டனர்.

வடக்கு-கிழக்கைச் சேர்ந்த சகல மக்கள் பிரதிநிதிகளையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி உங்களால் முன்னுதாரணத்தை வழங்க முடியாமல் போனது.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கு செலுத்திய கட்டுப்பணத்தை திரும்ப தருவதாக ஜனாதிபதி கூறுகிறார். நீங்கள் கிராமத்திற்கு அதிகாரங்களை வழங்குவது பற்றி பேசுகிறீர்கள்.

கட்டுப்பணத்தை பெற்று தேர்தலை நடத்தாமல் இருக்கும் நிலையில், உங்களது அதிகாரப் பகிர்வு என்ன?. யாருக்காக அதிகாரங்களை பகிரப் போகிறீர்கள்?.

உங்களது எதிர்கால ஜனாதிபதி கனவுக்காக எமது தாய் நாட்டைக் காட்டிக்கொடுக்க நாங்கள் இணங்கமாட்டோம்-என்றார்.

# காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை இரும்பு திருட்டுக்கு அமைச்சரே பொறுப்பு!

## சி.ஐ.டியில் முறைப்பாடு

கொழும்பு, ஓக. 11

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் கடந்த 02 ஆம் திகதிக்குள் 22 மில்லியன் ரூபா பெறுமதியான இரும்பு திருடப்பட்டமைக்கு இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் பொறுப்பேற்கவேண்டும் என இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரான சட்டத்தரணி காமினி ஏக்கநாயக்க குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்து உடனடியாக விசாரணையை ஆரம்பிக்க வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

முறைப்பாட்டை முன்வைத்த அவர், சிமெந்து தொழிற்சாலை வளாகத்திலிருந்த பலகோடி ரூபாய் பெறுமதியான இரும்பின் அளவு குறித்து தொழில்நுட்பக் குழு மதிப்பீடு செய்ததாகக் கூறியிருந்தார்.

தொழிற்சாலையை புனரமைப்பதற்கான அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இந்த காணியில் பழைய இரும்புகளை விற்பனை செய்வதற்கான தீர்மானத்தை கேள்வி கோரல் முறையில் அமுல்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

ஆனால் அமைச்சரவைத் தீர்மானத்தை அமுல்படுத்தாமல் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் முதலில் தொழிற்சாலை வளாகத்தில் பாதுகாப்புக்கு இருந்த இராணுவத்தை அகற்றி குறைந்த எண்ணிக்கையில் மாத்திரம் விட்டு தொழிற்சாலை வளாகத்தை பாதுகாப்பற்றதாக்கியுள்ளார்.

இத்தொழிற்சாலைக்கு பதுளையில் இருந்து கொண்டு வரப்பட்ட ஏழு பேரை ஆட்சேர்ப்பு செய்ததற்கும், இராணுவம் வெளியேற்றப்பட்டு அப்பகுதி பாதுகாப்பற்றதாக மாற்றப்பட்ட இரண்டு மாதங்களில் 22 மில்லியன் இரும்பு திருடப்பட்டதற்கும் இடையே தெளிவான தொடர்பு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, இந்த இரும்புத் திருட்டு குறித்து முறையான விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் முன்னாள் தலைவர் முறைப்பாடு அளித்துள்ளார்.

இரும்பு திருட்டு குற்றச்சாட்டு தொடர்பில் பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்ட தகவல் ஒன்றின் பிரகாரம், ஆத்திரமடைந்த இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத், தன்னை கேள்வியெழுப்பிய பாராளுமன்ற உறுப்பினரையும், காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் முன்னாள் தலைவர் சட்டத்தரணி காமினி ஏகநாயக்கவையும் நேற்று முன் தினம் திட்டியுள்ளார்.

(அ)

# நாமல் தலைமையில் எதிர்க்கட்சிப் படை!

கொழும்பு, ஓக. 11

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை சுற்றியுள்ள அமைச்சுப் பதவிகள் கிடைக்காத சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட மேலும் சிலரின் ஆதரவுடன் “எதிர்க்கட்சி படை” என்ற அணி உருவாக்கப்பட உள்ளதாக பொதுஜன பெரமுனவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான விசேட பேச்சுவார்த்தை நாமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஒரே இந்த அரசியல் வேலைத்திட்டம் வெற்றியளித்தால், பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடியும் முன்னர் நாமல் ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவர் பதவி வரை கொண்டு செல்வது எனவும் பேசப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அந்த அணிக்கான பாராளுமன்ற உறுப்பினர்களை இணைக்கும் நடவடிக்கைகள் இரகசியமான முறையில் நடந்து வருவதாக தெரியவருகிறது.

# பெருந்தோட்ட மக்களின் பிரச்னைகளை ஆராய தேசிய ஆணைக்குழு வேண்டும்!

## சஜித் பிரேமதாஸ வலியுறுத்து

கொழும்பு, ஓக. 11

**“மலையக பெருந்தோட்ட மக்களின் பிரச்னைகள் தொடர்பில் ஆராய்வதற்கு , பரிந்துரைகளை முன்வைப்பதற்கு தேசிய ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட வேண்டும். அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உடன் அமுலுக்குவரும் வகையில் ஜனாதிபதி செயலணி நிறுவப்பட வேண்டும்.”**

-இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் தற்போது நடைபெற்றுவரும் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் சஜித் மேலும் கூறியவை வருமாறு:

பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் உரிய புள்ளி விபரம் அரசிடம் உள்ளதா? எனவே, முறையான கணக்கெடுப்பு நடத்தி தகவல்கள் பெறப்படவேண்டும்.

பெருந்தோட்டப்பகுதியை எடுத்துக்கொண்டால் சுகாதாரம், கல்வி, உட்கட்டமைப்பு வசதி மற்றும் நலன்புரி விடயங்களில் பல குறைப்பாடுகள் காணப்படுகின்றன. தொழில்நுட்ப அறிவு, நவீன தொழில் நுட்ப பயன்பாடு என்பவற்றியும் பின்தங்கிய நிலை காணப்படுகின்றது. இவற்றை தீர்ப்பதற்கு கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டும்.

சர்வதேச தொழில் சட்டத்துடன், எமது நாட்டு தொழில்சட்டம் சில விடயங்களுடன்



பொருந்தவில்லை. இதனாலும் தோட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றன.

பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட குத்தகை உடன்படிக்கையால்தான் இந்நிலைமை என சிலர் கூற முற்படுகின்றனர். அப்படியானால் 94 இற்கு பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள் தேங்காய் துருவினார்களா? ஒப்பந்தம் பலவீனமெனில் அதனை சீர்செய்வதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

பெருந்தோட்ட மக்களின் வீட்டு பிரச்னைக்கு தீர்வு வழங்காததற்கு இந்நாட்டை ஆண்ட அனைத்து அரசுகளும் பொறுப்புகூற வேண்டும். எனவே, இப்பிரச்னையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

பெருந்தோட்ட பகுதிகளில் பயிரிடப்படாத நிலங்கள் பயிரிடலுக்காக வழங்கப்பட வேண்டும். பயிரிடல் நில உரிமையும் தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். பெருந்தோட்ட தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும். எமது ஆட்சியில் முதல் பணி இதுவாகவே இருக்கும்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நிபந்தனை அடிப்படையில் அல்லாமல் ஏற்புடைய சம்பளம் வழங்கப்பட வேண்டும். மொழி, அரச சேவையில் சம உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அம்மக்களின் கலாசாரத்தை பாதுகாக்க வேண்டும். மலையக மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் தேர்தல் முறைமை இருத்தல் அவசியம்-என்றார்.

(அ)

# மடுத் திருவிழாவில் இம்முறை 7 இலட்சம் பக்தர்கள் திரள்வர்

மன்னார், ஓக. 11

மன்னார்- மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா திருப்பலியில் இம்முறை நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 7 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொள்ள உள்ளதாக மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

இந்நிலையில், வருகை தரும் பக்தர்களின் நலனை கருத்திக்கொண்டு சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணித் திருவிழா தொடர்பாகவும் ஆயத்த நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயும் 2 ஆவது கூட்டம் நேற்று முன்தினம் மடு திருத்தல மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற உள்ள மடு திருவிழா தொடர்பாகவும் முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த ஆயர்,

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவை முன்னிட்டு நீர்,சுகாதாரம், மருத்துவம், போக்குவரத்து போன்ற தேவைகளை உரிய திணைக்களங்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது நவநாள் திருப்பலிகள் இடம்பெற்று வருகின்றன. எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை மாலை நற்கருணை ஆராதனையும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இம்முறை திருவிழா திருப்பலி திருத்தந்தையின் பிரதிநிதி தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட உள்ளது.

ஏற்கனவே மடு திருத்தலத்தில் உள்ள விடுதிகள் எல்லாம் மக்களுக்கு வழங்கப்பட்டு விட்டன.

மேலும் 500க்கும் மேற்பட்ட தற்காலிக கூடாரங்கள் அமைக்கப்பட்டு மக்கள் வருகை தந்துள்ளனர். மக்களுக்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து மடு சந்திக்கான விசேட ரயில் சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மன்னாரில் இருந்து அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன-என்றார்.

(அ)

# அனைத்து பல்கலை மாணவர் ஒன்றியத்தின் 10 பேருக்கு தடை

கொழும்பு, ஓக. 11

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் மதுசான் சந்ரஜித் உள்ளிட்ட 10 பேருக்கு கொழும்பு கோட்டை பகுதியின் பல இடங்களுக்குள் உட்பிரவேசிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்தினால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் என பொலிஸாரால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், நிதியமைச்சு, காலிமுகத்திடல், மற்றும் அலரி மாளிகை உள்ளிட்ட இடங்களுக்குள் உட்பிரவேசிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அமைதியான முறையில் போராட்டங்களை நடத்த முடியும் என கோட்டை நீதவான் திலின கமகே தெரிவித்தார்.

(அ)

# புதிய பொருளாதாரக் கொள்கைகளை முன்மொழிய கல்வியியலாளர்கள் குழு

கொழும்பு, ஓக. 11

நாட்டில் நடைமுறைப்படுத்த வேண்டிய வரி முறைமை மற்றும் கடைப்பிடிக்க வேண்டிய பொருளாதாரக் கொள்கைகள் குறித்த முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்குப் பல்கலைக்கழக சமூகத்தினரை உள்ளடக்கிய நிபுணர்கள் குழுவை அமைப்பதற்கு பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு தீர்மானித்துள்ளது.

குறித்த குழு நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார பின்னடைவின் பாதிப்புக்கள் மற்றும் அவற்றிலிருந்து மீள்வதற்கு எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஆராய்வதற்காக கூடியுள்ளது.

இதன்போதே இத்தீர்மானம் எட்டப்பட்டது.

இது தொடர்பில் குழுவின் தலைவர் தெரிவிக்கையில்,

“நாட்டில் பல்வேறு கொள்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளபோதும் தேசிய நிதிக் கட்டமைப்பொன்று இதுவரை இல்லை. இதனை விரைவில் தயாரிக்க வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரைத் தெளிவுபடுத்தி பாராளுமன்றத்தின் ஊடாக உரிய முன்மொழிவுகளை சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளோம்.

இந்த செயற்பாட்டில் பல்கலைக்கழக சமூகத்தினர் உள்ளிட்ட சகல தரப்பினரையும் ஒன்றிணைக்க திட்டமிட்டுள்ளோம்.

இவ்விடயங்களைத் தொடர்ந்து முன்கொண்டு செல்வதற்கும், சம்பந்தப்பட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கும் நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றை இரண்டு வாரங்களுக்குள் நியமிக்க தீர்மானித்துள்ளோம்.

முறையான வரிக்கொள்கை இல்லாமை, அரசாங்க நிறுவனங்களின் வினைத்திறன் அற்ற தன்மை, தொழிற்சந்தைக்கு ஏற்ற கல்விக்கொள்கை இல்லாமை போன்ற பல்வேறு விடயங்கள் நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள நிலைமைக்குக் காரணமாகியிருப்பதாக இங்கு வருகை தந்திருந்த கல்வியியலாளர்கள் சுட்டிக்காட்டினர்.

இலங்கையில் தேவைக்கும் அதிகமான கொள்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளபோதும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலேயே குறைபாடு காணப்படுகின்றது-என்றார்.

(அ)

# காலநிலை மாற்றத்தால் மீனின் விலை அதிகரிப்பு



## இராஜாங்க அமைச்சர் தகவல்

கொழும்பு, ஓக. 11

மீன் விலை அதிகரிப்பில் காலநிலை மாற்றங்கள் தாக்கம் செலுத்தி வருவதாக இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்தார்.

மீனவர்களின் பெருமையைப் பாதுகாத்து நவீன தொழில்நுட்பத்துடன் மீன்பிடித் தொழிலை முன்னேற்றுவதற்கு அமைச்சு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய பொருளாதார சவால்களை வெற்றிகொண்டு நாட்டை கட்டியெழுப்பும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்திற்கு கடற்றொழில் அமைச்சு பாரிய பங்களிப்புகளை வழங்கி வருகிறது.

அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு ஆதரவளிக்காத அரச அதிகாரிகள் தொடர்பில் கடுமையான தீர்மானங்கள் எடுக்கப்படவேண்டும்.

2048 இல் அபிவிருத்தியடைந்த இலங்கையை கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்க அனைவரும் ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் செயற்பட வேண்டும்.

2048 ஆம் ஆண்டளவில் முன்னேறிய இலங்கையை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு பொறுப்பு வாய்ந்த அமைச்சு என்ற வகையில், கடற்றொழில் அமைச்சுக்கும் அதிகளவான பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த இலக்குகளை அடைவதற்காக கடற்றொழில் அமைச்சு கடந்த வருடத்தில் பல வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

மீனவர்களின் பிரச்னைகளை கண்டறிந்து அவர்களின் நலனுக்காக விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம். மீன்பிடித் தொழிலை மேம்படுத்துவதற்கு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், சர்வதேச உறவுகளை வலுப்படுத்துவதில் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. மீனவ சமுதாயத்தின் நலனுக்காக மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு காப்புறுதித் திட்டம், ஓய்வூதியம், சேமிப்புத் திட்டங்கள் போன்ற திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது மீன்பிடித்துறை அமைச்சு மக்களுக்கு நெருக்கமான பணிகளை முன்னெடுத்து வரும் அதேநேரம், இதுவரையில் காணப்பட்ட பாரம்பரிய வேலைத்திட்டங்களுக்கு மேலதிகமாக அமைச்சின் இணை நிறுவனங்களுடன் கைகோர்த்து பெருமளவான வேலைத்திட்டங்கள் முன்னெடுத்து வருகிறது-என்றார்.

(அ)

# வறட்சி நிலையை யாரும் அரசியலாக்கவேண்டாம்!

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஓக. 11

**நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை பருவகால நிகழ்வு, எனவே இதில் அரசியல் இலாபம் தேட எவரும் முயற்சிக்க வேண்டாமென பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.**

**எல்லாவற்றையும் அரசியல் மயப்படுத்தினாலும் மக்கள் பாதிப்புக்களை அரசியல் மயப் படுத்தவேண்டாமென்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் 13 மாவட்டங்களில் 50,535 குடும்பங்களைச் சேர்ந்த 166,904 பேர் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அந்தந்த மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்புடன் குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

காலநிலையில் ஏற்படும் பருவகால மாற்றங்களினால் நாட்டில் வரட்சியான காலநிலை நிலவுகிறது.

மேலும் எதிர்வரும் மாதங்களில் எதிர்பார்க்கப்படும் பருவ மழையுடன் நிலைமை மேம்படும்.

பாதுகாப்பு அமைச்சின் அனர்த்தமுகாமைத்துவப் பிரிவு, நீர்ப்பாசன அமைச்சு, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு, விவசாய அமைச்சு, கமநல அபிவிருத்தித் திணைக்களம், நீர்ப்பாசன திணைக்களம், மகாவலி அதிகாரசபை, மின்சார சபை, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு, வளிமண்டலவியல் திணைக்களம் உள்ளிட்ட அரச நிறுவனங்களுடன் நாங்கள் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளோம்.

நாட்டின் பல பகுதிகளில் இருந்து இதுவரை 58 காட்டுத் தீ விபத்துகள் பதிவாகியுள்ளன.



இவற்றில் பெரும்பாலானவை மனித நடவடிக்கைகளால் ஏற்படுகின்றது.

இதுபோன்ற சம்பவங்களை தடுக்கும் வகையில், இதுபோன்ற குற்றவாளிகளுக்கு எதிராக சட்டங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும்-என்றார்.

(அ)

# இரசாயனம் கலக்கப்பட்ட 82,000 கிலோ கொத்தமல்லி!

## கல்முனையில் ஒருவர் கைது

கல்முனை, ஓக. 11

கல்முனையில் இரசாயனம் கலந்த ஒரு தொகை கொத்தமல்லியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய திருக்கோயில் விசேட அதிரடிப் படையினர் மற்றும் அம்பாறை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினரும் இணைந்து சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

தரமற்ற கொத்தமல்லிக்கு இரசாயனம் கலந்து விற்பனை செய்வதற்காக பொதி செய்து வைக்கப்பட்டிருந்த 82,000 கிலோகிராம் கொத்தமல்லியே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், பொதி செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட கருவிகள், இயந்திரம் உள்ளிட்ட பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரை கல்முனை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மாதாந்தம் 300 மில்லியன் கடன் வசூலை தாண்டியது வீடமைப்பு அதிகார சபை!

கொழும்பு, ஓக. 11

அடுத்த சில மாதங்களில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கடன் மீளப்பெறும் இலக்கானது 400 மில்லியன் ரூபாவை தாண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அதிகார சபையின் பொது முகாமையாளர் இதனை அறிவித்துள்ளார்.

அதற்கான முறையான வேலைத்திட்டத்தை அதிகார சபை ஏற்கனவே நடைமுறைப்படுத்தியுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சுமார் 1 - வருடங்களுக்கு முன்னர் கடன் மீளப்பெறுதலில் மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்த தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, தற்போது மாதாந்த இலக்கான 300 மில்லியன் கடன் வசூலை தாண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(அ)

# எச்.ஐ.வி. அபாயத்தை தடுப்பதற்கு புதிய சிகிச்சை முறை அறிமுகம்

கொழும்பு, ஓக. 11

எச்.ஐ.வி அபாயம் உள்ளவர்கள் அந்த அபாயத்தைத் தடுப்பதற்காக "ப்ரெப்" என்ற புதிய சிகிச்சை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக என்று தேசிய பாலியல் நோய் எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள பாலியல் நோய் கிளினிக்குகளில் இந்த சிகிச்சைகளை பெற்றுக் கொள்ள முடியும் என அதன் பணிப்பாளர் வைத்தியர் ஜானகி விதானபத்திரன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய பாலியல் நோய் எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம், எச்.ஐ.வி அபாயத்தில் உள்ளவர்களுக்கு சிகிச்சை முறையைத் தொடங்கியுள்ளது. நாடளாவிய ரீதியில் உள்ள 41 தேசிய பாலியல் நோய் மையங்களில் "ப்ரெப்" சிகிச்சையைப் பெறலாம்.

நீங்கள் எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்படும் ஆபத்தில் இருப்பவராக இருந்தால், மருத்துவரைச் சந்தித்து உங்கள் ஆபத்து குறித்துப் பேசித் தேவையான சிகிச்சையைப் பெறுங்கள்.

இதற்காக கொடுக்கப்படும் பரிசோதனைகள் மற்றும் மருந்துகள் இலவசமாகும். எச்.ஐ.வி ஆபத்தில் உள்ளவர்களுக்கு இந்த சிகிச்சைகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்-என்றார். (அ)

# 20 இலட்சம் குடும்பங்களுக்கு இந்த மாதம் கொடுப்பனவு

கொழும்பு, ஓக. 11

அஸ்வெசும நலன்புரி திட்டத்திற்காக கிடைக்கப் பெற்ற மேன் முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் மீதான பரிசீலனை இம்மாதம் நிறைவடையும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பயனாளிகளுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்காக மாதாந்தம் 5.2 பில்லியன் ரூபா பணம் செலவிடப்படுகிறது.

20 இலட்சம் குடும்பங்களுக்கு நன்மைகளை வழங்குவதே அஸ்வெசும நலன்புரி உதவித் திட்டத்தின் நோக்கம்.

அத்துடன், கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, இந்த வருடத்தின் முதல் 6 மாதங்களில் 38 வீத பொருளாதார வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது.

இதேவேளை அஸ்வெசும சமூக நலன்புரித் திட்ட உதவிகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தற்போது பிரதேச செயலாளர்களின் தலைமையில் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் பணிகள் நிறைவடைந்தவுடன் 2024ஆம் ஆண்டுக்கான புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் பணியை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த திட்டத்தின் மூலம் தகுதியானவர்களுக்கு, நேரடியாக வங்கிக் கணக்குகளுக்கே பணம் வைப்புச் செய்யப்படும்-என்றார். (அ)

# பயன்பாட்டிலிருந்து 5 வகையான மருந்துகளை நீக்க நடவடிக்கை!

கொழும்பு, ஓக. 11

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படும் மருந்துகளில் 5 வகையான மருந்துகளை பயன்பாட்டிலிருந்து நீக்குவதற்கு தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபை தீர்மானித்துள்ளது.

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் மருந்துகள் மற்றும் தடுப்பூசிகள் விஷமாவதால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் தடுப்பூசி உள்ளிட்ட 5 வகையான மருந்துகளை பயன்பாட்டிலிருந்து நீக்குவதற்கு தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபை தீர்மானித்துள்ளது.

இதற்கமைவாக Prepofol தடுப்பூசி, Bupivacaine, Amexileve, Pedrizolone மற்றும் Cefrizone ஆகிய மருந் துகள் பயண்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

மருந்துகளை கொள்வனவு செய்யும் அல்லது மருந்துகளை இறக்குமதி செய்யும் நடவடிக்கைகளில் தேசிய ஒழுங்குமுறை ஆணையம் தலையிடாது எனவும், மருந்து தொடர்பில் பிரச்னை ஏற்பட்டால் குறித்த விடயத்தில் தாங்கள் தலையிடுவதாகவும் தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதேநேரம், மருந்துகளை இறக்குமதி செய்யும் அரசாங்கம் அல்லது தனியார் நிறுவனங்களால் மாத்திரமே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று குறித்த அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கம் மருந்துகளை இறக்குமதி செய்யும் போது, உரிய வகையில் கேள்வி கோரல் இடம்பெற்று அரச கொள்முதல் விதிகளின்படி மருந்துகள் கொள்வனவு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் நாட்டிற்கு தேசிய ஔடத அதிகார சபை மருந்துகளை கொள்வனவு செய்வதாக தெரிவிக்கப்பட்ட கருத்துகளை நிராகரிப்பதாகவும், அதில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லை எனவும் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

(அ)

# ஆசியான் நாடுகளுடன் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை!

கொழும்பு, ஓக. 11

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன் பிராந்திய பரந்த பொருளாதார கூட்டிணைவில் அங்கத்துவம் பெற்று, ஏனைய ஆசியான் நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்கான பேச்சுகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்தோ - பசுபிக் பிராந்தியம் தொடர்பான 'ஆசியான்' அமைப்பின் தொலைநோக்கு பார்வைக்கு தான் உடன்படுவதாகவும், அந்த தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் செல்வதற்கு பூரண ஆதரவை வழங்குவதாகவும் அவர் மேலும் கூறினார்.



கொழும்பில் உள்ள இந்தோனேசிய தூதரகத்தில் இடம்பெற்ற 56ஆவது "ஆசியான்" தின கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, 'ஆசியான்' அமைப்பில் நுழைவதற்கான முன்மொழிவு நிராகரிக்கப்பட்டதாகவும், அதன் அங்கத்துவம் கிடைக்காததால், அதற்கு மாற்றீடாக, பிராந்திய பரந்த பொருளாதாரக் கூட்டிணைவில் இணைந்து முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்றும் கூறினார்.

(அ)

பென் மோரிஸ்

# வோலோசிட்டி: உள்ளூர் பயணத்தை எளிதாக்கும் மின்சார விமானம்

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் இன்னும் ஒரு வருடத்தில் கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகள் தொடங்க உள்ளன. இந்தப் போட்டிகளில் பங்கேற்று புதிய சாதனைகள் படைக்க தடகள வீரர்கள் ஆவலுடன் இருப்பார்கள். இந்த கோடை திருவிழா ஒருபுறமிருக்க, அதற்கு முன்பே பாரிஸ் மாநகரம் மற்றொரு புதிய பயண அனுபவத்துக்கு ஆயத்தமாகி வருகிறது.

'வோலோசிட்டி' (Volocity) என்றழைக்கப்படும் மின்சாரத்தில் இயங்கும் இரண்டு இருக்கைகள் கொண்ட சிறிய விமானம், பயணிகளை ஏற்றிக் கொண்டு பாரிஸ் மாநகரை சுற்றி வலம் வர தயாராகி வருகிறது.

எல்லாம் திட்டமிட்டபடி நடைபெற்றால், ஐரோப்பாவில் மின்சாரத்தால் இயக்கப்படும் முதல் விமான சேவை என்ற பெருமையை வோலோசிட்டி பெறும்.

விமானம் ஓடுதளத்தில் இருந்து மேலெழுவதில் இருந்து (டேக் ஆஃப்) அது வானில் பறந்து தனது இலக்கை அடைந்ததும் தரையிறங்குவது வரை, மின்சாரத்தில் இயங்கும் தொழில்நுட்பத்தை கொண்ட விமானங்களை தயாரிக்கும் முயற்சியில் உலகம் முழுவதும் பல நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.

### பாரிஸ் நகர வான வீதியில் பறக்க தயாராகும் வோலோசிட்டி

இந்த வகை விமானங்கள் ஒலி மாசு ஏற்படுத்தாதவை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்தவை என்பதுடன், ஹெலிகாப்டர் போன்றவற்றை ஒப்பிடும்போது இதில் பயணக் கட்டணமும் குறைவாக இருக்கும் என்று என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் விதத்தில், மின்சார விமானங்கள் பாரிஸ் நகரில் விரைவில் தரையிறங்கும் என்று நம்பப்படுகிறது.

அதற்கு முன், வோலோசிட்டி விமானத்தை தயாரித்து வரும் ஜெர்மனியை சேர்ந்த 'வோலோகாப்டர்' எனும் நிறுவனம், ஐரோப்பிய ஒன்றிய விமானப் போக்குவரத்து ஒழுங்குமுறை முகமையின் (EASA) ஒப்புதலை எதிர்பார்த்துள்ளது.

இந்த ஒப்புதல் கிடைப்பதை பொறுத்து அடுத்த சில மாதங்களில் பாரிஸ் நகர வான் வீதியில் வோலாசிட்டியை பறக்க விட முடியும் என்பதுடன், அடுத்த ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற உள்ள இடங்களுக்கு பார்வையாளர்களை ஏற்றிச் செல்லவும் முடியும் என்று அந்நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

"அடுத்த ஆண்டின் மத்தியில் வோலோசிட்டி விமானப் போக்குவரத்து சேவையை தொடங்குவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன" என்று வோலாகாப்டர் நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரியான கிறிஸ்டியன் பாயர் கூறுகிறார்.

### உள் கட்டமைப்பு பணிகள்

மின்சார விமான போக்குவரத்தை வழங்குவதற்கு வசதியாக, பாரிஸ் போன்ற நெரிசலான நகரங்களில், விமானப் பாதைகள் மற்றும் அவற்றின் இறங்குதளங்களை அமைப்பது தொடர்பான நிறைய பணிகள் செய்யப்பட்டுள்ளன.

ஒரு புதிய விமானத்தை உருவாக்கி, அதற்கான சான்றிதழைப் பெறுவதில் உள்ள தொழில்நுட்ப சவாலை சேர்த்து, வோலோ காப்டர் நிறுவனம், அதன் 12 ஆண்டு கால வரலாற்றில் நிறைய சாதித்துள்ளது என்பதே விமானப் போக்குவரத்து துறை நிபுணர்களின் கருத்தாக உள்ளது.

### வர்த்தக ரீதியான சவால்

ஆனால் வோலோகாப்டருக்கும், அதன் போட்டியாளர்களுக்கும் வரும் ஆண்டுகளில் மிகப்பெரிய சவால்கள் காத்திருக்கின்றன என்ற வாதத்தையும் சிலர் முன்வைக்கின்றனர். அதாவது மின்சார விமான போக்குவரத்துக்கு உலக அளவிலான சந்தை இருக்கிறது என்பதை இந்தச் சேவையை வழங்கும் நிறுவனங்கள் வரும் ஆண்டுகளில் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்கின்றனர் அவர்கள்.

### தொழில்நுட்ப ரீதியான சவால்

வர்த்தக ரீதியான இந்த போட்டி ஒருபுறமிருக்க, மின்சாரத்தில் இயங்கும் விமானங்களில் பயன்படுத்தப்படும் பேட்டரிகள் மிகப்பெரிய பிரச்னையாக உள்ளது என்கின்றனர் அவர்கள். அதாவது இதில் பயன்படுத்தப்படும் பேட்டரிகள் கனமானவையாகவும், விலை அதிகமானதாகவும் உள்ளன. இது இவ்வகை விமான சேவைக்கான கட்டண வரம்பில் உள்ள நன்மைகளை குறைத்துவிடுகிறது என்கின்றனர் நிபுணர்கள்.

அத்துடன், வோலோசிட்டி வகை விமானங்கள் 22




மைல்கள் வரை இயங்கும் வரம்பை கொண்டுள்ளன. இது ஒரு நகரத்தில் குறுகிய தொலைவில் விமானத்தை இயக்க போதுமானதாக இருக்கலாம். ஆனால் ஒரு ஹெலிகாப்டரின் இயக்க வரம்பை ஒப்பிடும்போது, இது குறைவான தொலைவாகவே கருதப்படுகிறது.

மின்சார விமான சேவைக்கு பேட்டரி தொழில்நுட்பம் ஓர் தடையாக இருக்கிறது என்பதை கிறிஸ்டியன் பாயர் ஒப்புக்கொள்கிறார்.

"பேட்டரி தொழில்நுட்பத்தில் தற்போதுள்ள தடைகளை தகர்த்தெறியும் பணிகளை, மின்சார விமான தயாரிப்பு நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன" என்கிறார் அவர்.

### பயணக் கட்டணம் எப்படி இருக்கும்?

அதிக சக்தி வாய்ந்த பேட்டரிகள், மலிவான விலையில் கிடைக்கும் நிலை உருவாகும்போது, குறைந்த கட்டணத்தில் இரண்டுக்கும் மேற்பட்ட பயணிகளுடன் பெரிய அளவிலான வோலோசிட்டி விமானங்களை இயக்க இயலும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார் அவர்.

"கிட்டத்தட்ட ஒரு ஹெலிகாப்டர் பயண கட்டணத்தை ஒத்த, கட்டணத்துடன் வோலோசிட்டி விமான சேவை தொடங்கப்படும். அதன்பின், ஒரு விமானத்தில் நான்கு அல்லது ஆறு பயணிகள் ஒரே நேரத்தில் பயணிக்கும் நிலை வரும்போது, பயணக் கட்டணம் படிப்படியாக குறைக்கப்படும்" என்று கூறுகிறார் பாயர்.



### பெரிய அளவிலான மின்சார விமானம்

பயணக் கட்டணத்தை கருத்தில் கொண்டு, ஜெர்மனியை தளமாகக் கொண்ட லில்லியம் நிறுவனம், ஒரே நேரத்தில் ஆறு பேர் பயணிக்கும் அளவுக்கு பெரிய அளவிலான விமானத்தை வடிவமைத்துள்ளது.

வோலோசிட்டி விமானங்களை போல் இல்லாமல், தொழில்நுட்ப ரீதியில் முற்றிலும் மாறுபட்ட விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள லில்லியம் நிறுவனத்தின் மின்சார விமானங்களை வர்த்தக ரீதியில் இயக்குவதற்கு வசதியாக, 2025 இல், ஐரோப்பிய ஒன்றிய விமானப் போக்குவரத்து ஒழுங்குமுறை முகமையின் சான்றிதழைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மக்கள் கூட்டம் அதிகம் உள்ள பெருநகரங்களை சுற்றிலும், ரயில் இணைப்பு சேவை குறைவாக இருக்கும் இடங்களை இலக்காக கொண்டும் தனது மின்சார விமான போக்குவரத்து சேவையை வழங்க லில்லியம் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

"குறைந்த கட்டணத்தில் ரயில் போக்குவரத்து சேவை வழங்கப்படும் நகரங்களில், அதனுடன் போட்டியிட மாட்டோம். ரயில் போக்குவரத்து போன்ற உள்கட்டமைப்புகள் இல்லாத இடங்களிலும், இதுபோன்ற உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க கடினமாக உள்ள பகுதிகளிலும் எங்களின் போக்குவரத்து வசதியை வழங்குவோம்" என்கிறார் லில்லியம் நிறுவனத்தின் தலைமை நிர்வாகியான கிளாஸ் ரோவ்.

### 100 விமானங்களை வாங்க திட்டம்

ஷென்சென் ஈஸ்டர்ன் ஜெனரல் ஏவியேஷன் நிறுவனம், (ஹெவி ஈஸ்டர்ன்) லில்லியம் நிறுவனத்தின் 100 விமானங்களை வாங்குவது தொடர்பாக, கடந்த ஜூன் மாதம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளதை ரோவ் சுட்டிக் காட்டுகிறார்.

ஹெலி -ஈஸ்டர்ன் நிறுவனம், சீனாவின் கிரேட்டர் பே பகுதியில் விமான இணைப்பு சேவையை வழங்கி வருகிறது. ஹாங்காங், ஷென்சென், மக்காவ் ஆகிய பகுதிகள், சீனாவின் கிரேட்டர் பேயில் அடங்கும். இந்த பகுதியில் அமைந்துள்ள எழில் மிக்க மலைகள், தீவுகள் மற்றும் தீபகற்ப பகுதிகளை விமானத்தில் சுற்றிவருவது அலாதியான அனுபவம் என்கிறார் ரோவ்.

### பேட்டரி தொழில்நுட்பத்தில் கவனம்

ஆனால் வோலோகாப்டர் நிறுவனத்தை போலவே, லில்லியம் நிறுவனமும் மின்சார விமான போக்குவரத்தில் எதிர்பார்க்கப்படும் போட்டியை சமாளிக்கும் விதத்தில், தங்களின் விமானங்களுக்கான பேட்டரி தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகிறது.

பேட்டரிகளின் விலையில் நிச்சயமற்ற தன்மை இருப்பதாக கூறும் ரோவ், இதன் விலை குறையும் என்பதுடன், அவற்றின் திறன் அதிகரிக்கும் என்று நம்புவதாக கூறுகிறார்.

கார்களுக்கான பேட்டரிகள் தயாரிப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், மின்சார விமானங்களுக்கான பேட்டரிகள் உற்பத்திக்கு பயன்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

"பேட்டரிகள் உற்பத்திக்கான செயல்முறை ஒரே மாதிரியாக இருக்கும் போது, மின்சார விமானங்களுக்கான பேட்டரிகள், பிற எந்த வாகன பேட்டரிகளை விடவும் விலை அதிகமாக இருக்க வேண்டும் என்பதற்கு எந்த காரணமும் இல்லை" என்கிறார் ரோவ்.

ஆனால், "மின்சாரத்தில் இயங்கும் விமானங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்த பேட்டரி தொகுப்பை கொண்டுள்ளன. அத்துடன் குறைந்த அளவில், அதிக விலை மதிப்பில் இந்த பேட்டரிகள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றின் உற்பத்தி விரைவில் அதிகரிக்க வாய்ப்பில்லை" என்கிறார் வானூர்தி பொறியியல் துறை நிபுணரான பிஜோர்ன் ஃபெர்ம்.

மின்சக்தியில் இயங்கும் விமானங்களில், அவற்றின் இயக்கத்திற்கு தேவைப்படும் ஆற்றல் பேட்டரியில் இருந்து அதி வேகமாக பெறப்படுகிறது. இது காருக்கு அதன் பேட்டரியில் இருந்து கடத்தப்படும் ஆற்றலை விட அதிகம் என்கிறார் அவர்,

மேலும், இந்த ஆற்றல் பயன்பாடு சிக்கனமாக இருக்க, விமானத்துக்கு பேட்டரியில் இருந்து மின்சாரம் விரைவாக செலுத்தப்பட வேண்டியுள்ளது. மேலும் ஆற்றல் இழப்பும் விரைவாகவே செய்யப்பட வேண்டியுள்ளது, இதன் விளைவாக பேட்டரியில் அதிக பாதிப்பு ஏற்படுகிறது.

இந்த பாதிப்பை எதிர்கொள்ளும் வகையில் தான், மின்சார விமானங்களுக்கு காரை விட முற்றிலும் மாறுபட்ட, விலை உயர்ந்த பேட்டரி தேவைப்படுகிறது என்கிறார் பிஜோர்ன் ஃபெர்ம்.

### விதை போட்டுள்ள வோலோகாப்டர் நிறுவனம்

பேட்டரி உற்பத்தி திறனில் தற்போது நிலவிவரும் பற்றாக்குறை, மின்சார விமானங்களின் போக்குவரத்து சேவையை கட்டுப்படுத்துவதாக அமைந்துள்ளது. எனவே, பேட்டரி தொழில்நுட்பம் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், இவ்வகை விமானங்கள் அதிக எண்ணிக்கையில் உற்பத்தி செய்யப்படும் வகையில், புதிய நிறுவனங்கள், பெரிய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும் என்கிறார் ஃபெர்ம்.

தெற்கு ஜெர்மனி பகுதியில் உள்ள புருச்சலில் தனது முதல் உற்பத்தி ஆலையை வோலோகாப்டர் நிறுவனம், கடந்த ஏப்ரலில் திறந்துள்ளது. ஆண்டுக்கு 50 மின்சார விமானங்களை தயாரிக்கும் திறன் கொண்ட இந்நிறுவனம், இந்த தசாப்தத்தின் முடிவில் ஆண்டுக்கு 5,000 முதல் 7,000 விமானங்களை உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மின்சார விமானங்கள் உற்பத்தி துறையில் இன்னும் நிறைய முதலீடுகளும், பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என்பதை ஒப்புக் கொள்கிறார் வோலாகாப்டர் நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரியான கிறிஸ்டியன் பாயர்.

"எங்களின் மின்சார விமானத்துக்கு, ஐரோப்பிய ஒன்றிய விமானப் போக்குவரத்து ஒழுங்குமுறை முகமையின் சான்றிதழை பெறும் முயற்சியில் கடைசி கட்டத்தில் இருக்கிறோம். இந்தப் பணி முடிந்ததும், இந்த சேவையை லாபகரமானதாக ஆக்குவதற்கான அடுத்த கட்ட பணிகள் தொடங்கும்" என்கிறார் அவர்.

# சமஷ்டி, தனிநாடு பின்னர் மீண்டும் சமஷ்டி, தற்போது 13வது திருத்தமாவது காப்பாற்றப்படுமா?



யதீந்திரா

இன்று 13வது திருத்தச்சட்டத்திலும் வெட்டிக் குறைப்புக்கள் செய்வது தொடர்பில் உரையாடப்படுகின்றது. 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் தமிழர் தரப்புக்களின் நிலைப்பாடுகள் என்னவாகவும் இருக்கலாம் ஆனால் 13வது திருத்தச்சட்டத்தையாவது பாதுகாக்க முடியுமா அல்லது அதனையும் வெட்டிக் குறைப்பதை அமைதியாக பார்த்துக் கொண்டிருப்பதா - என்னும் நிலையிலேயே தமிழ் தேசிய அரசியல், அதன் இயலாமைய பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது. விடுலைப் புலிகளுக்கு பின்னரான கடந்த, ஒரு தசாப்தத்திற்கும் மேலான அரசியல் நகர்வானது, நமது தமிழ் தேசிய தரப்புக்களின் இயலாமைக்கான சான்றாகும். இதில் கொள்கைரீதியான உத்தமர்கள் தொடர்பில் விவாதிக்க ஒன்றுமில்லை. அனைவருமே தோல்வியின் அடையாளங்கள்தான்.

சிங்கள ஆளும் வர்க்கம் தமிழ் மக்களுடன் அதிகாரங்களை பகிர்வதற்கு தயாராற்ற சூழலில்தான், தமிழர்களுக்கான அரசியல் இயக்கம் உருவானது. 1949இல், இலங்கை தமிழரசு கட்சியை உருவாக்கிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம், நான் உங்களுக்கு ஒரு அடையாளத்தை உருவாக்கித் தருவேன் என்றார். தமிழரசு கட்சியை ஆங்கிலத்தில் சமஸ்டிக் கட்சியென்று அழைத்தார். இதன் மூலம், தமிழ் மக்களுக்கான தனித்துவமான அடையாளமென்பது, சமஸ்டியடிப்படையிலான இணைப்பாட்சி ஒன்றின் மூலம்தான் சாத்தியப்படுமென்பதே செல்நாயகத்தின் நிலைப்பாடாக இருந்தது. அவ்வாறானதொரு நிலைப்பாட்டிலிருந்து, ஜி.ஜி.பொன்னம்பலம் விலகிச் சென்றதன் காரணமாகவே, செல்வநாயகம் அகில இலங்கை தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறி, தமிழரசு கட்சியை உருவாக்கினார். இந்தப் பின்புலத்தில் நோக்கினால், பொன்னம்பலத்தின் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் எப்போதோ, சமஸ்டிக் கோரிக்கையை தூக்கியெறிந்து விட்டது. இதனை புரிந்து கொண்டிருப்பதால்தான், ஜி.ஜி.பொன்னம்பலத்தின் பேரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்னும் பெயரை பயன்படுத்தாமல், தமிழ் தேசிய மக்கள் முன்னணியென்னும் பெயரில் மக்களிடம் செல்கின்றார்.

செல்வநாயகம் இவ்வாறு சமஸ்டிபற்றி பேசினாலும் கூட சமஸ்டியை அடைவதற்கான போராட்டங்களில் ஈடுபடவில்லை. சமஸ்டியடிப்படையிலான அரசியல் தீர்வொன்றை நோக்கி நகரமுடியுமென்று அவர் நம்பியிருக்கலாம் ஆனால் அதனை ஒரு பாய்ச்சலில் அடைந்துவிட முடியுமென்று அவர் ஒருபோதும் நம்பியதாக தெரியவில்லை. 1957இல் இடம்பெற்ற பண்டா - செல்வா உடன்பாடு பின்னர், 1965இல், இடம்பெற்ற டட்லி-செல்வா உடன்பாடுகளின் மூலம் இது தெளிவாகத் தெரிகின்றது. ஏனெனில் இந்த உடன்பாடுகளில் சமஸ்டி பற்றி பிரஸ்தாபிக்கப்படவில்லை. மிகவும் குறைவான அதிகாரங்கள் தொடர்பிலேயே குறிப்பிடப்பட்டிருந்தது. சமஸ்டியை கட்சியின் பெயரில் வைத்திருந்த செல்வநாயகம் சமஸ்டிக்கான இணக்கப்பாடு தொடர்பில்தானே பேசியிருக்க வேண்டும். அதற்காகத்தானே அவர் சிங்களத் தலைவர்களுடன் உடன்பாடுகளை எட்ட முயற்சித்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நடைபெறவில்லையே! ஏன்?

செல்வநாயகம் தொடர்பான சுயசரிதையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதவாது, செல்வநாயகம் எவ்வாறான தலைவரென்றால், அவர் கேக் கிடைக்கவில்லை என்பதற்காக பானை நிராகரிக்கின்ற தலைவர் அல்ல. இந்த பின்புலத்தில் செல்வநாயகம் சமஸ்டியை இலக்காகக் கொண்டிருந்தாலும், சமஸ்டிக்கான உடனடி வாய்ப்புக்கள் தொடர்பில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்னும் முடிவுக்கே நாம் வரவேண்டியிருக்கின்றது.

செல்வநாயகத்தின் குறைந்த தீர்வை எட்டும் முயற்சிகளும் கைகூடவில்லை. சமஸ்டிக்கான பிரத்தியேக போராட்டங்கள் எதனையும் முன்னெடுக்காத செல்வநாயகம் அணியினர்தான், பின்னர், தனிநாட்டுக்கான கோரிக்கையை நோக்கி சிந்தித்தனர். தனிநாட்டுக்கான கோரிக்கையை காவலூரார் வி. நவரெட்ணம் முன்வைத்த போது, அதனை நிராகரித்த செல்வநாயகம், பின்னர், தனிநாட்டுக் கோரிக்கைதான் ஒரேயொரு வழியென்னும் முடிவுக்கு வருகின்றார். ஆனால் அப்போதும் தனிநாட்டை எவ்வாறு அடைவதென்னும் கேள்விக்கு செல்வநாயகத்திடம் பதிலில்லை. இது தொடர்பில் ஒரு முறை இரா.சம்பந்தனுடன் பேசிக் கொண்டிருக்கும் போது, அவர் கூறினார், இந்தியாவிற்கு தேவைப்பட்டிருந்தால் அது வந்திருக்கும். ஆனால் இந்தியாவிற்கு அவ்வாறானதொரு தனிநாடு தேவைப்பட்டிருக்கவில்லை என்பதை புரிந்துகொள்வதற்கு காலம் எடுத்தது. அதனை ஆய்வு செய்து புரிந்து கொள்ளக் கூடிய வல்லமையுடன் செல்வநாயகமும் இருக்கவில்லை. அன்றிருந்த அனைவரும் சட்டத்துறை சார்ந்தவர்களாக இருந்ததால், பிராந்திய, சர்வதேச அரசியல் சூழலை புரிந்துகொள்ளக் கூடிய ஆற்றலுடன் அவர்கள் இருக்கவில்லை.

சமஸ்டியைப் போலவே, செல்வநாயகத்தின் தனிநாட்டுக் கோரிக்கையும் பிசுபிசுத்துப் போனது. வழிமுறை தெரியாது முன்வைக்கப்படும் நிலைப்பாடுகள் அனைத்துமே வெறும் ஏட்டுச் சுரக்காய்தான். அது கறிக்கு உதவாது. ஆனால் தனிநாட்டுக் கோரிக்கையை ஆயுத பலம் கொண்டு அடைய முடியுமென்னும் புதிய சிந்தனையொன்று துளிர்விட்டு, வேகமாக வளர்சியுற்றது. மிதவாதிகளின் இயலாமையே இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு காரணம். இந்த பின்புலத்தில்தான், தமிழர்களின் அரசியல் சர்வதேச கவனத்தை பெறுகின்றது. தமிழர்களை பொறுத்தவரையில், சர்வதேசமென்பது, முதலில் இந்தியாதான்.

இந்தியா இல்லாத சர்வதேசம் என்பது எப்போதுமே சாத்தியமற்ற ஒன்று. அன்றைய உலக அரசியல் சூழலும், அந்தச் சூழலில், அப்போதைய ஆட்சியாளர் ஜே.ஆர். ஜெயவர்த்தன முன்னெடுத்த வெளிவிவகாரக் கொள்கையின் காரணமாகவே, இந்தியா கடுமையாக நடந்துகொண்டது. ஒரு வேளை, ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்தியாவை சார்ந்திருக்கும் அல்லது அனிசாரா அணுகுமுறைக்கு மாறான கொள்கைரீயான முடிவுகளை எடுக்காதிருந்திருந்தால், இந்தியா இராணுவ ரீதியான தலையீட்டை மேற்கொண்டிருக்காது. ராஜதந்திர அணுகுமுறையிலேயே விடயங்கள் இடம்பெற்றிருக்கும். ஆனால் நிலைமைகள் இந்தியாவின் கையை மீறிச் சென்றதன் காரணமாகவே, இந்தியா சில கடுமையான நிலைப்பாடுகளை முன்னெடுக்க வேண்டியேற்பட்டது.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் இடம்பெற்று 36 வருடங்களாகின்றன. மீண்டும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் அன்று நிராகரிக்கப்பட்டதாக கூறப்பட்ட 13வது திருத்தத்தையாவது பாதுகாக்க முடியுமா, என்னும் கேள்வியுடன், தமிழ் தேசிய அரசியலின் புதிய அத்தியாயம் எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றது.





**அன்றிருந்த சூழலில், 13ஆவது திருத்தச்சட்டத்தின் பெறுமதியும், அதனை பயன்படுத்துவதற்கான தமிழருக்கான வாய்ப்பும் வேறுவிதமானது. அன்று தமிழருக்கான முழுமையான ஆதரவு நிலையில், ஒரு பிராந்திய சக்தியே இருந்தது. இந்திய இராணுவம் வடக்கு கிழக்கில் நிலைகொண்டிருந்தது. ஆளுநர், முதலமைச்சரை பார்த்து நடுங்கினார். இப்போதுள்ள நிலைமை முற்றிலும் வேறானது. இன்றைய நிலையில் ஈழத் தமிழர்களுடன், முழுமையான ஆதரவு நிலையில், எவரும் இல்லை.**

தமிழரின் யுத்தம் தனிநாட்டுக்கானது. விடுதலைப் புலிகளின் தோல்வி மீளவும் தமிழரின் அரசியல் தலைவிதியை மிதவாதிகளின் கைகளுக்கு மாற்றியது. மிதவாதிகளின் தோல்வியை தொடர்ந்துதான் இயக்கங்களின் எழுச்சி ஏற்பட்டது. 90களின் பின்னர் விடுதலைப் புலிகளின் எழுச்சியானது. தனிநாட்டுக்கான பயணத்தின் தோல்வி மீளவும் சமஸ்டியை உயர்த்திப்பிடிக்கும் நிலைமைய ஏற்படுத்தியது. இங்கு பலரும் கவனிக்க மறுக்கின்ற ஒரு விடயம் உண்டு. அதாவது, சமஸ்டியை அடையும் முயற்சியில் ஏற்கனவே மிதவாதிகள் தோல்வியடைந்திருந்தனர். கடந்த 74 வருடகால தமிழ் தேசிய அரசியலில், சமஸ்டிக்கான பேரம் பேசலை செய்வதற்கான ஆற்றல் பிரபாகரனிடம் மட்டுமே இருந்தது ஆனால், அவர் அதனை பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கவில்லை. அவரால் தனிநாட்டுக்கு மாற்றான விடயமொன்றை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

ஆனால் 2009இற்கு பின்னர், ஏற்கனவே தோல்வியடைந்த மிதவாதிகள், மீளவும் சமஸ்டி பற்றிப் பேசிய போது, இதனை எவருமே கேள்விக்குள்ளாக்கவில்லை. ஒப்பீட்டடிப்படையில் செல்வநாயகம் காலத்தில் மிதவாதிகள் குறிப்பிடத்தக்க அரசியல் சக்தியாக இருந்தனர். ஆளுமைமிக்க அரசியல்வாதிகள் இருந்தனர் ஆனாலும், அவர்களால் சமஸ்டிக் கோரிக்கையை வெற்றிகொள்ள முடியவில்லை. இந்த நிலையில் ஒப்பீட்டடிப்படையில் மிகவும் பலவீனமான நிலையிலிருக்கும் தற்போதைய மிதவாதிகளால் எவ்வாறு சமஸ்டியை அடைய முடியும்?



இந்தக் கேள்விக்கான பதிலாகவே இந்திய-இலங்கை ஒப்பந்தம் மீளவும் தமிழர் அரசியலில் தவிர்க்க முடியாத ஒன்றாக நோக்கப்படுகின்றது. ஏனெனில், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற அதிகாரப்பகிர்வு ஏற்பாடு ஒன்றுதான், இன்றுவரையில் நிலைத்து நிற்கின்றது. அதில் போதாமைகள் இருக்கின்றது என்பது எந்தளவிற்கு உண்மையோ, அதனைத் தாண்டிச் செல்வதற்கான பேரம் பேசும் ஆற்றலுடன் தமிழர் தரப்பு இல்லையென்பதும் உண்மையாகும். இந்த இடத்தில் புரிந்து கொள்ள வேண்டிய இன்னொரு பிரதான விடயம் உண்டு. அதாவது, தமிழர்களுக்கு எந்தவொரு வெளித்தரப்பினதும் ஆதரவும் இல்லை.

அவ்வாறானதொரு ஆதரவுநிலை இருந்திருந்தால், 13வது திருத்தச்சட்டத்தையாவது காப்பாற்ற வேண்டிய நிலைக்கு தமிழர் அரசியல் கீழிறங்கியிருக்காது. இந்த நிலைமையை புரிந்துகொண்டால், தற்போது இருப்பதை உச்சபட்சமாக பயன்படுத்திக் கொண்டு, முன்னேறும்

(10ஆம் பக்கம் பார்க்க)

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி மாபெரும் போராட்டம்

அம்பாறை, ஓக. 11

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி நேற்று முன் தினம் புதன்கிழமை மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

கடந்த யுத்த காலத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி வடக்கு, கிழக்கில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் அம்பாறை மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது இரத்தச் சொந்தங்களுக்கு நீதி கோரி நேற்றுடன்



2000 நாட்கள் பூர்த்தியாகுவதையொட்டி மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.

வடக்கு - கிழக்கு இணைந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். (அ)

# முஸ்லிம் பிரதிநிதிகளுடனும் அரசு பேச்சு நடத்தவேண்டும்

## ரவூப் ஹக்கீம் கோரிக்கை

கொழும்பு, ஓக.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் ஊடாக இனப் பிரச்னைக்கு தீர்வை தேடும் போது முஸ்லிம் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பாராளுமன்றத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்கவிடம் கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதி நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் விசேட உரையை நிகழ்ச்சிய பின்னர், ஹக்கீம் இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதிகாரங்களை பகிர்வது, அபிவிருத்தி, சட்ட ரீதியான விடயங்கள் சம்பந்தமான ஜனாதிபதி தெளிவுப்படுத்தினார்.

இந்த சந்தர்ப்பத்தில் இரண்டாவது விடயம் குறித்து சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

வடக்கு, கிழக்கு தேர்தல் தொடர்பான விடயங்களை முன்வைக்கும் போது, முஸ்லிம்களும் அதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

நாங்கள் உங்களுடன் (ஜனாதிபதி) நேரடியாக இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவோம் -என்றார். (அ)

# சமஷ்டி, தனிநாடு பின்னர் மீண்டும் சமஷ்டி,..

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழிமுறை ஒன்றே, சாத்தியமான ஒன்றாக இருக்கின்றது. ஆனால் அதற்குக் கூட வெளித்தரப்புக்களின் அழுத்தம் அவசியப்படுகின்றது. இந்தியா ஒன்றுதான் அவ்வாறான அழுத்தங்களை பிரயோகிக்கக் கூடிய ஒரேயொரு நாடாக இருக்கின்றது. இந்திய-இலங்கை ஒப்பந்தம் அதற்கான வாய்ப்பை வழங்குகின்றது. ஈழத் தமிழர்களும் இந்தியாவிடம்தான் தங்களின் கோரிக்கைகளை முன்வைக்க வேண்டியிருக்கின்றது ஏனெனில், தமிழ் மக்கள் சார்பில், இந்தியாதான் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்கின்றது. இலங்கை விடயங்களை முன்னெடுக்க தவறும் போது, இந்தியாவின் தலையீட்டைக் கோரும் உரித்து தமிழ் மக்களுக்குண்டு.

யுத்தத்திற்கு பின்னரான கடந்த 14 வருடங்களில், தமிழ் தேசிய அரசியல்வாதிகள், புலம்பெயர் அமைப்புக்களும், பல முயற்சிகளை முன்னெடுத்ததாக கூறிக்கொண்டாலும் கூட, கொழும்பின் ராஜதந்திர லொபியை தோற்கடிப்பதில், தமிழர் தரப்பால் சிறிய வெற்றியைக் கூட பெற முடியவில்லை. அவ்வாறு வெற்றியை பெற்றிருந்தால், 13வது திருத்தச்சட்டத்திலுள்ள விடயங்களைக் கூட அமுல்படுத்துவதற்கு இந்தளவு சிக்கல்களை எதிர்கொள்ளும் சூழல் ஏற்பட்டிருக்காது. அதே வேளை, புதுடில்லியை நோக்கிச் செல்வதிலும், ஈழத் தமிழர் தரப்பால், குறிப்பிடத்தகு வெற்றியை பெறமுடியவில்லை. ஈழத் தமிழர் தரப்பின் தொடர் தோல்விகள்தான், தற்போதையை நிலைமைக்கு காரணம். எனவே இப்போதுள்ள சூழலில், 13வது திருத்தத்தையாவது பாதுகாப்போம் என்று கூறுபவர்கள் மீது கோபம் கொள்வதில் பயனில்லை. அவர்கள் தற்போதுள்ள சூழலில் சாத்தியமானதை பேசுகின்றனர். தமிழ் மக்களின் நலனில் அக்கறையுள்ளவர்கள் அவ்வாறுதான் சிந்திக்க முடியும்.

உண்மையில், கடந்த 14 வருடங்களாக, வெட்டிக் கதைகள் பேசிக் கொண்டிருந்த, தமிழ் தேசியவாதிகள் என்போர் மீதுதான், உண்மையிலேயே, கோபப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக தங்களை 24கரட் தேசியவாதிகளாக காண்பிக்க முற்படுவர்கள் மீதுதான், தமிழ் சமூகம், அதன் கோபத்தை காண்பிக்க வேண்டும். ஏனெனில், காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும். பின்னர் காற்று வரவில்லையே என்று அங்கலாய்ப்பதில் பயனில்லை. ஈழத் தமிழ் சமூகத்தின் இன்றைய நிலைக்கு சந்தர்ப்பங்களை நிறுத்துப் பார்த்து, பயன்படுத்தத் தெரியாமல் போனமையே அடிப்படையான காரணமாகும். முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பது போல், ஈழத் தமிழ் அரசியல் தொடர்ந்தும் சறுக்கிக்கொண்டே செல்கின்றது.

சந்தர்பங்கள் நழுவவிடப்படுகின்ற போது, மீண்டும் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் முன்னரைப் போல் இருக்க வாய்ப்பில்லை. 13வது திருத்தச்சட்ட விவகாரம் இதற்கு சிறந்த உதாரணமாகும். அன்றிருந்த சூழலில், 13வது திருத்தச்சட்டத்தின் பெறுமதியும், அதனை பயன்படுத்துவற்கான தமிழருக்கான வாய்ப்பும் வேறுவிதமானது. அன்று தமிழருக்கான முழுமையான ஆதரவு நிலையில், ஒரு பிராந்திய சக்தியே இருந்தது. இந்திய இராணுவம் வடக்கு கிழக்கில் நிலைகொண்டிருந்தது. ஆளுனர், முதலமைச்சரை பார்த்து நடுங்கினார். இப்போதுள்ள நிலைமை முற்றிலும் வேறானது. இன்றைய நிலையில் ஈழத் தமிழர்களுடன், முழுமையான ஆதரவு நிலையில், எவரும் இல்லை. நிரந்தர நண்பர்களை பெறும் வகையிலான புத்திசாலித்தனமான அரசியலை, தமிழர்கள் முன்னெடுக்கவுமில்லை. ●






# அமெ. டொலர் ஆசையில் ரூபாயை இழந்தார் பெண்

**மட்டக்களப்பு, ஓக. 11**

**அமெரிக்காவில் இருந்து 70 ஆயிரம் டொலர், கைக்கடிகாரம், தங்க ஆபரணங்கள் கொண்ட பொதி ஒன்றினை வட்ஸ் அப் மூலம் வீடியோ படத்தை அனுப்பி, சுங்க திணைக்களத்தில் கடமையாற்றும் பெண் போல் நடித்தவரிடம் மட்டக்களப்பிலுள்ள பெண் ஒருவர் 95 ஆயிரம் பணத்தை பறிகொடுத்துள்ளார்.**

அமெரிக்காவைச் சேர்ந்த வெள்ளைகாரப் பெண் ஒருவர் மட்டு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள பெண் ஒருவருடன் வட்ஸ் அப் மூலம் தொடர்பு கொண்டு இருவரும் நீண்ட கால மாக நட்புறவாடி வந்துள்ளனர்.

இந்நிலையில் உங்களுக்கு பெரும் பணம், தங்க ஆபரணங் கள் வெகு விரைவில் கிடைக்கும். தான் பெரிய பணக்காரர் என பெண்ணிடம் அமெரிக்க நண்பி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் சம்பவதின மான கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு பெண்ணுக்கு இலங்கையிலுள்ள கையடக்க தொலைபேசியின் இலக்கத்தில் இருந்து வட்ஸ் ஆப் மூலம் தொடர்பு கொண்ட பெண் ஒருவர் தான் விமான நிலைய சுங்க திணைக்களத்தில் கடமை யாற்றி வருதாகவும் உங்கள் பெயர் விலாசத்துக்கு அமெரிக்காவில் உள்ள உங்கள் வெள்ளைக்கார நண்பி பொதி ஒன்றை அனுப்பி யுள்ளார் என்றும் கூறியுள்ளார்.

அந்த பொதியில், 70 ஆயிரம் டொலர் தங்க ஆபரணங்கள், கைக்கடிகாரம் இருப்பதாகவும் டொலரை பாசலில் அனுப்ப முடியாது எனவும் இது சட்ட விரோதமானது என்றும் குறிப் பிட்டுள்ளார்.

எனவே இந்த பொதியை சுங்க திணைக்களத்தில் இருந்து விடுவித்து தருவதற்கு 2 இலட் சத்து 50 ஆயிரம் ரூபா அனுப்பு மாறும் பொதியில் உள்ள 70 ஆயிரம் கொண்ட டொலரை வீடியோ படம் எடுத்து வட்ஸ் ஆப்பில் அனுப்பி காண்பித்து பணத்தை வங்கி ஊடாக அவச ரமாக அனுப்புமாறும் தெரிவித் துள்ளார்.

இதனையடுத்து வட்ஸ்அப் பில் அனுப்பிய வீடியோ படத்தை நம்பி உடனடியாக மோசடி கும்பல் அனுப்பிய வங்கிக் கணக்கில் 95 ஆயிரம் ரூபாயை அனுப்பிய பின்னர் சுங்க திணைக்களத்தில் வேலை செய்வதாக நடித்த பெண்ணின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தியபோது அந்த தொலைபேசி நிறுத்தப் பட்டுள்ளதையடுத்து தான் 95 ஆயிரம் ரூபா பணத்தை இழந்து ஏமாற்றப்பட்டுள்ளதை அவர் அறிந்துள்ளார்.

இதேவேளை, அண்மை காலங்களாக வெளிநாட்டில் இருந்து பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் பெட்டியில் வந்துள்ளது என்றும் அதனை விடுவிப்பதற்கு சுங்க அதிகாரிகளுக்கு பணம் வழங்க வேண்டும் எனவும் தெரிவிக்கும் இவ்வாறான மோசடி கும்பலுக்கு ஒரு இலட்சம் தொடக்கம் 6 இலட்சம் ரூபாவரையான பணத்தை அனுப்பி பலர் இழந் துள்ளனர் எனத் தெரிவிக்கப்படு கின்றது. (அ)



# அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தின் மாணவர்கள் தேசிய மட்டத்திற்கு தெரிவு

திருமலை, ஓக. 11

திருகோணமலை மெகெய் ஸர் மைதானத்தில் நடைபெறும் கிழக்கு மாகாண மட்ட பாடசா லைகளுக்கிடையிலான விளை யாட்டு போட்டியின் பட்மின் ரன் சுற்றுப் போட்டியில் ஆண் களுக்கான 16 வயதுப் பிரிவில் விளையாடிய கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலய மாணவர்கள் மூன்றாம் இடத்தை பெற்று பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக மாகாண மட்ட பெரு விளையாட்டுக்க ளில் வெற்றி பெற்று தேசிய மட் டத்திற்கு தெரிவாகி வரலாற்று வெற்றியை பதிவு செய்தனர். (அ)

# கல்முனை மாநகர நிதி மோசடி; கைதான இரண்டு பேர் மறியலில்

அம்பாறை, ஓக. 11

கல்முனை மாநகர நிதி மோசடி தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைதான இருவ ருக்கு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 23 ஆந் திகதி வரை விளக்கமறி யலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு கடந்த புதன் கிழமை கல்முனை நீதிமன்ற நீதி வான் எம்.எஸ்.எம் சம்சுதீன் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது ஆஜர்படுத்தப்பட்ட இரு சந்தேக நபர்களையும் 14 நாட்கள் விளக் கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டார்.

கல்முனை மாநகர நிதி மோசடி தொடர்பில் தற்போது விசாரணைகளை பொறுப்பேற் றுள்ள குற்றப் புலனாய்வு பிரிவி னர் கடந்த 7 ஆம் திகதி சாய்ந்த மருது பகுதியில் வைத்து கல் முனை மாநகர சபையில் கடந்த காலங்களில் தற்காலிக சிற்றுழி யர்களாக கடமையாற்றிய இரு சந்தேக நபர்களை கைது செய்தி ருந்தனர்.

முஹம்மது நகீப் அஸ்மத் சஹி (வயது-25) மற்றும் அப்துல் கரீம் முஹம்மது பர்சான் (வயது -26) ஆகிய இருவருமே கடந்த காலங்களில் ஒப்பந்த அடிப்படையில் வீடுகளில் வரி அறவீடு செய்தவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட் டவர்களாவர்.

கைதானவர்கள் முக்கிய வாக் குமூலங்களை வழங்கியுள்ளது டன் எதிர்வரும் காலங்களில் குறித்த வரிமோசடியுடன் தொடர்புடைய பல நபர்கள் கைது செய்யப்பட உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறித்த ஊழியர்களின் சேவைக் காலத்தில் வரியிருப்பாளர்கள் மேற்கொண்ட கொடுக்கல் வாங் கல் செயற்பாடுகளின்போது மேலும் மோசடி முறைகேடுகள் எவையும் மேலும் இடம்பெற் றுள்ளனவா என்பது தொடர்பி லும் இவற்றுடன் வேறு எவரா வது சம்பந்தப்பட்டிருக்கின்ற னரா என்பது குறித்தும் தீவிர மாக ஆராயப்பட்டு வருகின்றன.

மேலும் கடந்த காலங்களில் இவ்வரி மோசடி தொடர்பில் விசாரணைகள் பல தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலை யில் பலர் கைது செய்யப்பட்டு பணி இடைநிறுத்தம் செய்யப் பட்டிருந்தனர்.

அத்துடன் இவ்விடயம் பற்றி கிழக்கு மாகாண பிரதம செய லாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன் நிமித்தம் நிர்வாக மட் டத்தில் சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அத்துடன் குறித்த நிதிகையா டல் சம்பவம் தொடர்பில் கடந்த காலங்களில் கல்முனை பொலிஸ் நிலையம், அம்பாறை விஷேட குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் விசாரணை பொறுப் பளிக்கப்பட்டிருந்த நிலையில் அண்மையில் குற்றப்புலனாய்வு பிரிவிடம் இவ்வழக்கு விசார ணைகள் ஒப்படைக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கதாகும்.



# நிறுவை அளவை கருவிகளுக்கு முத்திரையிடல் நிகழ்வு ஆரம்பம்

அம்பாறை, ஓக. 11

அம்பாறை மாவட்ட செயல கத்தின் அளவீட்டு சேவைகளின தும் உபாயங்களினதும் பிரிவி னரால் பல்வேறு தராசுகளை பரி சோதனை செய்து சரி பார்க்கும் சான்றிதழ் செயற்பாடுகள் நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட் டுள்ளன.

கல்முனை பிரதேச செயல கத்திற்குட்பட்ட கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, பெரியநீலவணை, ஆகிய பிர தேச வியாபாரிகளின் நிறுவை, அளவை உபகரணங்களை சரி பார்த்து முத்திரை பதிப்பதற் கென நேற்று முன் தினம் முதல் நாளை சனிக்கிழமை வரையான நான்கு நாட்கள் இச்செயற்பாடு கள் காலை 9.30-3.30மணி வரை செயலக வளாகத்தில் மேற் கொள்ள முடியும் என பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி அறிவித்துள்ளார்.

எனவே குறித்த வர்த்தகர்கள் மீனவர்கள் தங்களுடைய வியா பார அளவை, நிறுவை உபகர ணங்களை கொண்டு சென்று முத்திரையிட்டுக் கொள்ளுமாறு கல்முனை பிரதேச செயலாளர் கூறியுள்ளார்.

இதன் போது இலத்திரனியல் தராசுகள், பாரம்பரிய தராசுகள், நிறுக்கும் உபகரணங்கள் உள் ளிட்ட பல்வேறு அளவீட்டுடன் கூடிய தராசுகள் சரி பார்க்கப் பட்டு சீல் செய்யப்பட்டு தரச் சான்றிதழ்கள் தற்போது வழங் கப்பட்டு வருகின்றன. (அ)

# காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி பட்மின்ரன் அணி தேசியமட்ட போட்டிக்கு!

காரைதீவு, ஓக. 11

கிழக்கு மாகாண கல்வி திணைக்களம் நடத்தி வரும் பெருவிளையாட்டுகளுக்கான போட்டியில் பட்மின்ரன் போட் டியில் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி அணி இரண் டாம் இடத்தை பெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகி யுள்ளது.

திருகோணமலையில் கடந்த மூன்று நாட்களாக நடந்த கிழக்கு மாகாண விளையாட்டு விழா வில் பட்மின்ரன் போட்டியில் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி அணி 20 வயதிற்குட் பட்ட போட்டியில் இரண்டாமி டம் பெற்றுகொண்டது.

இதன்போது ஏறாவூர் அல் அலிகார் தேசிய பாடசாலை வெற்றி கொண்டு அடுத்த சுற்றில் அம்பாறை டி.எஸ். சேனநா யக்கா தேசிய பாடசாலை வெற்றி



கொண்டு அரை இறுதிப் போட் டியில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி வெற்றி கொண்டு இறுதி போட்டிற்கு தெரிவுசெய்யப்பட்டனர்.

நேற்று முன் தினம் புதன்கி ழமை நடைபெற்ற விறுவிறுப் பாக இடம்பெற்ற இறுதிப் போட்டியில் திருகோணமலை கோணேஸ்வரா இந்து கல்லூரி அணியிடம் தோல்வியுற்று இரண்டாமிடம் பெற்றுகொண் டனர்.

இதன் மூலம் தேசிய போட் டிக்கு விபுலானந்த பட்மின்ரன் அணி தெரிவு செய்யப்பட்டுள் ளது. (அ)

# ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் ஈக்வடோரில் சுட்டுக்கொலை!

குயிட்டோ, ஓக. 11

**ஈக்வடோர் நாட்டின் ஜனாதிபதி வேட்பாளரான பெர்னாண்டோ வில்லவிசென்சியோ சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.**

**ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்றுவிட்டு அவர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றபோதே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.**

அவர் கூட்டத்திலிருந்து வெளியே வந்து காரில் ஏறிய சந்தர்ப்பத்தில், கூட்டத்தில் இருந்த ஒருவர் அவரைச் சுட்டார்.

சுமார் 12 துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈக்வடோர் நாட்டின் ஜனாதிபதி தேர்தலுக்கான முதல் கட்ட வாக்குப்பதிவு எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெற இருந்தது.

எவ்வாறாயினும் ஜனாதிபதி தேர்தலுக்கு 10 நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதி வேட்பாளரை சுட்டுக் கொன்றதை தாம் கண்டிப்பதாக ஈக்வடோர் நாட்டின் ஜனாதிபதி தெரிவித்தார்.



குற்றவாளிகள் எந்த நிலையில் இருந்தாலும் தண்டிக்கப்படவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், ஈக்வடோர் நாட்டில் எட்டு வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாகவும், அவர்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)



# அமெரிக்காவில் புதிய வகை கொவிட் 19 தொற்று பரவல்!

நியூயோர்க், ஓக. 11

பிரித்தானியாவில் கண்டறியப்பட்ட 'எரிஸ் - ஈ.ஜி 5' கொவிட் 19 தொற்று வகையானது தற்போது அமெரிக்காவிலும் பரவியுள்ளது.

புதிதாக கண்டறியப்பட்ட கொவிட் 19 தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் 17 வீதமானோர் 'எரிஸ் - ஈ.ஜி 5' நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க சுகாதார துறைகள் தெரிவிக்கின்றன.

'எரிஸ் - ஈ.ஜி 5' என்பது கொவிட் 19 ஒமிக்சுஒன் வைரஸின் துணை வகையாகும்.

உலக சுகாதார அமைப்பும் 'எரிஸ் - ஈ.ஜி 5' துணை வகையை கண்காணித்து வருவதாக கூறியுள்ளது.

கடந்த வாரம், 'எரிஸ் - ஈ.ஜி 5' குறித்து பிரித்தானிய விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், அந்நாட்டில் தொற்று வேகமாக பரவத் தொடங்கியது. (அ)




# அமெ. ஜனாதிபதியை முகநூலில் அச்சுறுத்திய நபர் சுட்டுக்கொலை

நியூயோர்க், ஓக. 11

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் ஏனைய அதிகாரிகளை இணையத்தளம் வழியாக அச்சுறுத்திய நபரை அந்நாட்டு பாதுகாப்பு பிரிவினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

ரொபேர்ட்சன் என்ற இந்த நபரின் வீட்டுக்கு சென்ற எப்.பி.ஐ. பொலிஸார், அவரை கைது செய்வதற்கான பிடியாணை வழங்க முயற்சித்த போது இந்த துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் நடந்துள்ளது.

இந்த சம்பவம் பராவோ தென் பகுதியில் உள்ள லேக் சிட்டியில் நடந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்க்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விமர்சனங்களை முன்வைத்துள்ள ரொபேர்ட்சன் தனது முகநூல் பக்கத்தில் அமெரிக்க ஜனாதிபதி மற்றும் அதிகாரிகளை மிரட்டி பதிவுகளை இட்டுள்ளார்.

துப்பாக்கி புகைப்படங்களை பதிவேற்றம் செய்து, ஜனாதிபதி பைடன், டொனால்ட் ட்ரம்புக்கு எதிரான விசாரணைகளை நடத்தி வரும் அதிகாரிகளை ரொபேர்ட்சன் அச்சுறுத்தும் வகையில் பதிவுகளை இட்டுள்ளார்.

இது குறித்து அமெரிக்க சட்டமா அதிபர் மற்றும் நியூயோர்க் மாநில சட்டமா அதிபர் எப்.பி.ஐயில் முறைப்பாடு செய்திருந்தனர். (அ)

# அதீத வெப்பம் காரணமாக 147 அமெரிக்கர்கள் மரணம்!

நியூயோர்க், ஓக. 11

அதிக வெப்பம் காரணமாக, அமெரிக்காவின் பல மாநிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 147 பேர் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்பார்த்ததை விட அதிக வெப்பத்தினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க வானிலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் அதிக வெப்பத்தினால் அமெரிக்காவின் 03 மாகாணங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. அதன்படி அரிசோனா, நெவாடா மற்றும் டெக்சாஸ் மாநிலங்கள்.

மேலும் அரிசோனா மாநிலத்தில் அதிக வெப்பம் காரணமாக 103 பேர் உயிரிழந்துள்ளனர். நெவாடாவில் இறந்தவர்களின் எண்ணிக்கை 26 என்றும், டெக்சாஸ் மாகாணத்தில் 18 பேர் உயிரிழந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. (அ)

# ஹவாயின் பிரபல லஹைனா நகரை காட்டுத் தீ அழித்தது!

## உயிர் தப்ப பலரும் கடலில் பாய்ந்தனர்! இதுவரை 36 பேர் பலி

நியூயோர்க், ஓக. 11

உலகின் பல பகுதிகளில் இருந்து ஊழிக்காலக் காட்சிகள் போன்ற இயற்கைப் பேரழிவுக் காட்சிகள் வெளியாகி வருகின்றன.

அமெரிக்காவின் உல்லாசபுரியாகிய ஹவாய்த் தீவுக் கூட்டங்களின் புகழ் பெற்ற லஹைனா கடற்கரை நகரைக் காட்டுத்தீ சூழ்ந்து முளாசி எரிகின்ற காட்சிகள் வெளியாகியுள்ளன. 1820 -1845 ஆண்டு காலப்பகுதியில் நிலவிய ஹவாய் ராஜ்ஜியத்தின் தலைநகராக விளங்கிய வரலாற்றுப் புகழ்மிக்க லஹைனா, ஹவாய் பிரதான தீவின் அருகே மௌயி என்ற தீவில் அமைந்துள்ளது.

தீவுக் கூட்டங்களில் பல இடங்களில் பரவிவந்த காட்டுத் தீ கட்டுக்கடங்காமல் நேற்று முன் தினம் புதன்கிழமை லஹைனா நகருக்குள்ளும் புகுந்துவிட்டது. நகரவாசிகள் அங்கிருந்து விரைந்து வெளியேறுமாறு கேட்கப்பட்டுள்ளனர். நகருக்குச் செல்கின்ற வீதிகள் மூடப்பட்டுள்ளன. இதுவரையான தகவல்களின்படி குறைந்தது 36 பேர் தீயில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

அந்தப் பிராந்தியத்தை மணிக்கு 130 கிலோ மீற்றர்கள் வேகத்தில் கடந்த 'டோறா' என்ற புயல் காற்று காட்டுத் தீயை மேலும் மூர்க்கமாகப் பரவச் செய்தது என்று கூறப்படுகிறது. திடீரெனத் தங்களை நெருப்புச் சூழ்ந்து கொண்டதை அடுத்து



துச் செய்வதறியாது திகைத்த சிலர் கடலில் பாய்ந்தனர் என்று சிஎன்என் செய்தி ஒன்று தெரிவித்தது.

திகில் திரைப்படம் ஒன்றை நேரில் பார்த்தது போல இருந்தது என்று தீயிடமிருந்து தப்பிய ஒருவர் விவரித்திருக்கிறார். வீதிகளின் இருபுறமும் வரிசையில் நிறுத்தப்பட்டிருந்த கார்கள் தீப்பற்றி எரியத் தொடங்கியதால் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது.

ஹவாய்த் தீவுகளுக்குப் பொறுப்பான அமெரிக்க செனட்டர் பிரையன் ஷாட்ஸ் லஹைனா நகரம் கிட்டத்தட்ட முற்றாகத் தீயில் எரிந்து தரைமட்டமாகிவிட்டதாகப் பதிவிட்டிருக்கிறார். பல ஆயிரக் கணக்கானோருக்குத் தற்காலிக இருப்பிடவசதிகள் அவசரமாகத் தேவைப்படுவதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

மௌயி தீவின் நிலைவரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அமெரிக்க அதிபரது அனர்த்த கால அவசரநிலைப் பிரகடனம் அவசியம் என்று தீவின் ஆளுநர் விடுத்த கோரிக்கையை அடுத்து அங்கு அவசரகால நிலைமை அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதிபர் ஜோ பைடன், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்காக இராணுவ அணி ஒன்ற அங்கு அனுப்ப உத்தரவிட்டிருக்கிறார். (அ)



# கனடா ஓப்பன் ரென்னிஸ் வோஸ்னியாக்கி வெற்றி!

மொன்றியல், ஓக. 11

கனடா ஓப்பன் ரென்னிஸில் வோஸ்னியாக்கி இலகுவாக வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

கனடா ஓப்பன் ரென்னிஸ் தொடர் மொன்றியல் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு போட்டியில் டென்மார்க்கை சேர்ந்த கரோலின் வோஸ்னியாக்கி, அவுஸ்திரேலியாவை சேர்ந்த கிம்பெர்லி பிர்ரெலை எதிர்த்தார்.

இந்த போட்டியில் 3 ஆண்டுகளுக்கு பின் ஓய்வு முடிவில் இருந்து களத்திற்கு திரும்பிய வோஸ்னியாக்கி எளிதில் வெற்றி பெற்றார்.

ஒரு மணிநேரம் 37 நிமிடங்கள் நடந்த இந்த போட்டியில் வோஸ்னியாக்கி 6-2 மற்றும் 6-2 என்ற நேர் செற் கணக்கில் கிம்பெர்லி பிர்ரெலை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

அவர் 2ஆவது சுற்று போட்டியில் விம்பிள்டன் சம்பியனான மார்கெட்டா வோன்ட்ரோசோவாவை எதிர்த்து விளையாட உள்ளார். (ஐ)

# ஆசியக் கிண்ண கிரிக்கெட் பாகிஸ்தான் அணி அறிவிப்பு

கராச்சி, ஓக. 11

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான 17 பேர் கொண்ட பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட 6 நாடுகள் பங்கேற்கும் ஆசியக் கிண்ணத் தொடர் வரும் 30ஆம் திகதி தொடங்குகிறது. முதல் போட்டியில் பாகிஸ்தான் மற்றும் நேபாளம் அணிகள் மோதுகிறது.

இந்தியா- பாகிஸ்தான் மோதும் லீக் போட்டி செப்ரெம்பர் 2 அன்று இலங்கையின் கண்டியில் நடைபெறும்.

இந்த நிலையில் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான 17 பேர் கொண்ட பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அணி விவரம்: பாபர் அசாம் ( அணித் தலைவர்), முகமது ரிஸ்வான், அப்துல்லா சபிக், இமாம் உல் ஹக், உசாமா மிர் ,சவுத் ஷகில், சல்மான் அலி, இப்திகார் அகமது, முகமது நவாஸ், உசாமா மிர், ஹரிஸ் ரவுப், நசீம் ஷா, ஷாகின் அப்ரிடி, தயாப் தாஹிர், முகமது ஹாரிஸ், பஹிம் அஸ்ரப், முகமது வசீம்.



# கனடா ஓப்பன் ரென்னிஸ்; காஸ்பர் ரூட் முன்னேற்றம்



மொன்றியல், ஓக. 11

கனடா ஓப்பன் ரென்னிஸ் தொடரில் காஸ்பர் ரூட் 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

கனடா ஓபன் ரென்னிஸ் தொடர் மொன்றியல் நகரில் நடைபெற்று வருகிறது. இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று போட்டியில் ரென்னிஸ் தரவரிசையில் 5ஆம் நிலை வீரரான நார்வேவை சேர்ந்த காஸ்பர் ரூட் செக் நாட்டின் ஜிரி லெஹக்கா உடன் மோதினார்.

போட்டி தொடங்கியது முதலே ஆட்டம் விறுவிறுப்பாக சென்றது. முதல் செட்டில் காஸ்பர் ரூட் ஏராளமான தவறுகள் இழைத்தார். இதனால் முதல் செற் சமநிலை தகர்ப்பு வரை சென்றது. இருப்பினும் முதல் செற்றை கைப்பற்றினார்.

இதனால் அவர் 2ஆவது செற்றில் சுதாகரித்து விளையாடினார். அதன் மூலம் 2ஆவது செற்றை கைப்பற்றி வெற்றி பெற்றார். இந்த போட்டியில் ரூட் 7-6 மற்றும் 6-4 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறி உள்ளார். அவர் 3ஆவது சுற்றில் டேவிடோவிச் போகினாவுடன் விளையாட உள்ளார். (ஐ)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி அட்டவணை மாற்றம்!



புதுடில்லி, ஓக. 11

இந்தியாவில் நடப்பாண்டு ஒக்ரோபர் - நவம்பரில் நடைபெற இருக்கும் ஒருநாள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில், இந்தியா - பாகிஸ்தான் மோதுவது உள்பட 9 போட்டிகளின் அட்டவணை மாற்றப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி) புதன்கிழமை வெளியிட்டது. இதன்படி, இந்தியா - பாகிஸ்தான் ஆட்டம் ஒக்ரோபர் 15இற்கு பதிலாக 14ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதேபோல், இந்தியா - நெதர்லாந்து போட்டி நவம்பர் 12இற்குப் பதிலாக 11ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இங்கிலாந்து - ஆப்கானிஸ்தான் அணிகள் ஒக்ரோபர் 14ஆம் திகதி மோதவிருந்த ஆட்டம், அடுத்த நாளான 15ஆம் திகதிக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது. இலங்கை - பாகிஸ்தான் மோதும் போட்டி ஒக்ரோபர் 11இற்குப் பதிலாக 10-ஆம் திகதியே விளையாடப்படவுள்ளது. இதே நாளில் பகலிரவு போட்டியாக நடைபெற இருந்த இங்கிலாந்து - பங்களாதேஷ் மோதல், தற்போது பகல் போட்டியாக காலை 10.30 மணிக்கே தொடங்குகிறது.

இங்கிலாந்து - பாகிஸ்தான் போட்டி நவம்பர் 12இற்கு பதிலாக, 11ஆம் திகதியே நடத்தப்படுகிறது. நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகள் ஒக்ரோபர் 14ஆம் திகதி சென்னையில் பகலில் விளையாட இருந்த போட்டி ஒக்ரோபர் 13ஆம் திகதிக்கு பகலிரவு ஆட்டமாக மாற்றப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா அணிகள் ஒக்ரோபர் 13ஆம் திகதிக்குப் பதிலாக, தற்போது 12ஆம் திகதியே மோதுகின்றன. போட்டிகளின் திகதிகள், நேரம் மட்டும் மாற்றப்பட்டுள்ள நிலையில் இடங்கள் மாற்றப்படவில்லை.

நவராத்திரி பண்டிகை காலத்தில் நடைபெறும் போட்டிகளுக்கான பாதுகாப்பு வழங்குவதில் நடைமுறை சிக்கல்கள் இருக்கின்றன என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, ஐ. சி. சி, பி. சி. சி. ஐ., இதர அணிகளின் சபைகளுடன் ஆலோசித்து அட்டவணையில் திருத்தம் கொண்டு வந்துள்ளன. (ஐ)



# மகளிர் உலகக் கிண்ணம் காலிறுதி இன்று ஆரம்பம்!

சிட்னி, ஓக. 11

பெண்களுக்கான உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதி போட்டிகள் 11ஆம் திகதி நடைபெறவுள்ளன.

பெண்களுக்கான 9ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாட்டில் நடக்கிறது.

இதில், கலந்து கொண்ட 32 அணிகளில் இருந்து 16 அணிகள் காலிறுதிக்கு முந்தைய சுற்றான 2ஆவது சுற்றுக்கு முன்னேறின.

2ஆவது சுற்றுப் போட்டிகள் கடந்த 5ஆம் திகதி தொடங்கி நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்தன.

இதன் முடிவில் ஸ்பெயின், ஜப்பான், நெதர்லாந்து, சுவீடன், இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கொலம்பியா, பிரான்ஸ் ஆகிய 8 அணிகள் காலிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

காலிறுதிப் போட்டி இன்று தொடங்குகின்றது. இன்றைய போட்டிகளில் ஸ்பெயின் - நெதர்லாந்து, ஜப்பான் - சுவீடன் அணிகள் மோதுகின்றன. (ஐ)

# மலையக மக்களுக்கு அனுதாபம் அல்ல நீதி, சம உரிமைகளை வழங்கவேண்டும்

## சபையில் மனோ எம்.பி. எடுத்துரைப்பு

கொழும்பு, ஓக. 11

**“மலையக மக்களும் இலங்கையர்களே, எனவே, இலங்கை பிரஜையொருவருக்கு கிடைக்க வேண்டிய அத்தனை உரிமைகளும் மலையக மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும். சம உரிமை பெற்ற மக்களாக எமது மக்கள் மாற வேண்டும். அதற்கான நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்படவேண்டும்.”**

-இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடியது. ஆரம்பகட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், பெருந்தோட்ட சமூகம் தற்போது எதிர்கொள்ளும் சமூக-பொருளாதார பிரச்னைகள் தொடர்பில் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை முன்வைத்து-விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மலையக மக்களுக்காக இந்தியா நிதி உதவி வழங்கியுள்ளது. இதனை முன்மாதிரியாகக் கொண்டு பிரிட்டன் அரசும் தமக்கான கடமையை நிறைவேற்ற வேண்டும். இலங்கையில் உள்ள பதில் பிரிட்டன் தூதுவர் இந்த செய்தியை, அந்நாட்டு அரசிடம் எடுத்துரைக்கவேண்டும்.

எங்களுக்கு அனுதாபம் அல்ல. நீதி-நியாயம்தான் தேவை. இலங்கை, இந்திய, பிரிட்டன் அரசுகளுக்கும் இதை சொல்கின்றோம்.

மலையக மக்களுக்காக இந்தியா வழங்கியுள்ள 300 கோடி ரூபா மலையக கல்வி அபிவிருத்திக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

இன்று காணி உரிமை பற்றி பேசப்படுகின்றது. இதனை வரவேற்கின்றோம்.

நல்லாட்சியின்போதே காணிக்கான சட்டரீதியான ஆவணம் வழங்கப்பட்டது. அன்று ஆரம்பிக்கப்பட்ட பயணம் தொடர வேண்டும்.

எமது மக்கள் தொடர்பில் மாற்றாந்தாய் மனப்பான்மை வேண்டாம், உரிமைகளை வழங்குங்கள்.

நாம் இலங்கையர்கள், இலங்கையராக இப்பிரச்சினையை தீர்க்கவே முயற்சிக்கின்றோம். எமது மக்களையும் முழு பிரஜைகளாக ஏற்பதற்கான உரிமைகள் அவசியம். அதனை வழங்குங்கள். மாறாக பிளக் டீ பிரச்சாரத்தை முன்னெடுக்கும் நிலைக்கு தள்ளிவிட வேண்டாம்-என்றார். (அ)

# நாட்டில் எந்த கோவிட் தடுப்பூசியும் இல்லை வெளிநாடு செல்ல முடியாமல் இளைஞர்கள்

## சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 11

நாட்டில் எந்த ஒரு கோவிட் தடுப்பூசியும் இல்லாதமையினால் கடுமையான நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

இதனால் மேற்கத்திய நாடுகளுக்குச் செல்ல எதிர்பார்த்து காத்திருக்கும் இளைஞர்கள் தங்கள் பயணத்தை மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெளிநாடு செல்ல எதிர்பார்ப்பவர்கள் கோவிட் தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான இலத்திரனியல் சான்றிதழ்களை பெற வருகின்றார்கள். அவர்களில் அதிகமானோர் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்களாவர்.

மேற்கத்திய நாடுகள் பல இன்னமும் தடுப்பூசி செலுத்திய சான்றிதழ்களை கேட்பதனால் வெளிநாடு செல்வதில் கடுமையான சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும். தற்போது மேற்கத்திய நாடுகளில் புதிய மாறுபாடுகள் அச்சுறுத்த ஆரம்பித்துள்ளன.

இலங்கையில் தடுப்பூசி இல்லாத ஒரு நிலையில் இந்த மாறுபாடுகள் நாட்டுக்குள் நுழைவதற்கும் வாய்ப்புகள் உள்ளன-என்றார். (அ)

# தாமரைக் கோபுரத்தைச் சேதப்படுத்திய இளைஞர் குழு பொலிஸாரிடம் ஒப்படைப்பு

கொழும்பு, ஓக. 11

பல எச்சரிக்கைகள் மற்றும் அறிவிப்புகளையடுத்து தாமரைக் கோபுரத்தின் கண்காணிப்புப் பிரிவில் சேதங்களை ஏற்படுத்திய இளைஞர்கள் குழுவொன்று இனங்காணப்பட்டுள்ளதாக தாமரைக் கோபுர நிர்வாகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இச் சம்பவத்தை நிர்வாகக் குழுவினர் மருதானை பொலிஸாருக்கு அறியப்படுத்தி உள்ளனர்.

அத்தோடு சேதம் விளைவித்த குழுவினரை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பல எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டபோதும் பொதுமக்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவது வருத்தமளிப்பதாக தாமரைக் கோபுரத்தின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

“பொதுச் சொத்தைப் பாதுகாப்பது எம் அனைவரது கடமையாகும். இருந்தபோதும் தாமரைக் கோபுர சுவர்கள் மற்றும் இரும்பு வேலிகளை சேதப்படுத்துபவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்து செல்கின்றது” என நிர்வாகக் குழு தெரிவித்துள்ளது.

(அ)





நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சப்பைரதத்தின் பீடம் நேற்று காலை இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளின் பின்னர் முற்பகல் 10 மணியளவில் பக்தர்களினால் இழுக்கப்பட்டு ஆலயத்தின் சப்பைரத தரிப்பிடத்தில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு!

கொழும்பு, ஓக. 11

நாட்டுக்கு வருகைத் தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அந்தவகையில், இந்த மாதத்தின் முதல் 6 நாட்களில் மட்டும் சுமார் 30 ஆயிரத்து 303 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள வாரந்த அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து நான்காயிரத்து 608 பேரும் அமெரிக்காவில் இருந்து 4 ஆயிரத்து 254 சுற்றுலாப்பயணிகளும் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சீனாவில் இருந்து 2 ஆயிரத்து 246 பேரும், பிரான்ஸில் இருந்து ஆயிரத்து 842 பேரும் ஜேர்மனியில் இருந்து ஆயிரத்து 791 பேரும் நாட்டை வந்தடைந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (அ)

# தொழுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 11

தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

மொறட்டுவையில் 51 தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களில் 14 வயதுக்குட்பட்ட 8 சிறுவர்கள் அடங்குவதாக மொறட்டுவை சுகாதார வைத்திய அதிகாரி மஞ்சுள திலகரத்ன தெரிவித்தார்.

கோவிட்-19 தொற்று காலத்தில் தனிமைப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் குடும்ப அங்கத்தவர்கள் இடையே தொழுநோய் பரவும் அபாயம் அதிகரித்ததாக வைத்திய அதிகாரி மஞ்சுளா திலகரத்ன தெரிவித்தார்.

தொழுநோய்க்குரிய பக்டீரியாக்கள் உடலில் தொற்றி 3 அல்லது 5 வருடங்களின் பின்னரே அறிகுறிகள் தென்படும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (அ)

# ஏற்றுமதியாகும் தேயிலைக்கு இனிமேல் அனுமதிக் கட்டணம்

கொழும்பு, ஓக. 11

ஏற்றுமதி செய்யப்படும் தேயிலைக்கு அனுமதி கட்டணம் அறவிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில், ஒரு கிலோகிராம் தேயிலைக்கு 3 ரூபா என்ற அடிப்படையில் அனுமதி கட்டணம் அறவிடுவதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை தேயிலைச் சபையின் தலைவரின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அறவிடப்படும் நிதியை இலங்கை தேயிலை மூலதன நிதியத்தில் வரவு வைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

# மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு ஜப்பான் தூதரகத்தால் இரு அம்புலன்ஸ்

யாழ்ப்பாணம், ஓக. 11

ஜப்பான் மக்களின் நிதியனுசரணையுடன் ஜப்பானிய தூதரகத்தால் நேற்று காலை மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு இரண்டு நோயாளர் காவு வண்டிகள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் எச்.இ .மிசுகொசி மற்றும் அவரது தூதரக அதிகாரிகள் இணைந்து இதனை வழங்கினர். மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையினரால் யாழ் இசைக் கருவி நினைவுச் சின்னமாக வழங்கப்பட்டு தூதுவர் கௌரவிக்கப்பட்டார்.



மூளாய் வைத்தியசாலையின் வசதி வாய்ப்புக்கள் குறித்தும் ஆராய்ந்த தூதுவர், தனது வருகையின் ஞாபகார்த்தமாக மரமொன்றினையும் வைத்தியசாலை வளாகத்தில் நாட்டி வைத்தார்.

இதன்போது ஜப்பான் தூதுவர் மிசுகொசி ,தூதுவராலய அதிகாரிகள்,மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையினர், பணியாளர்கள், சங்கானை பிரதேச செயலர், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, உதவி கூட்டுறவு ஆணையாளர் உட்பட்ட பலர் கலந்து கொண்டனர்.

(அ)

## மனிதப்புதைகுழி...

எடுக்கப்பட்டது. இதன்போது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதைப் போன்று மனிதப்புதைகுழியை பார்வையிடுவதற்காக ஏற்கனவே அழைக்கப்பட்ட தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், முல்லைத்தீவு மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரி வாசுதேவா மற்றும் திணைக்களத்தினர் சமுகமளித்திருந்தனர்.

இதன்போது தொல்பொருள் திணைக்களம் மதிப்பீடு செய்த செலவினத் தொகை தொடர்பான திட்ட மதிப்பு ஒரு வாரத்துக்குள் - எதிர்வரும் 17ஆம் திகதி நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 21ஆம் திகதி அகழ்வுப் பணியை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. எனினும், இந்தத் திகதி எதிர்வரும் 17ஆம் திகதி செலவின திட்டமதிப்பு நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும்போது உறுதிப்படுத்தப்படும் - என்றும் தெரிவிக்கப்பட்டது.

**கடந்து வந்த பாதை!**

ஜூன் 29 - நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தண்ணீர் குழாய்களை புதைப்பதற்காக கிடங்கு வெட்டிய போது மனித எலும்புக்கூடுகள் மற்றும் உடைகள் மீட்கப்பட்டன.

ஜூலை 06 - ச முல்லைத்தீவு நீதிவான் முன்னிலையில் புதைகுழி தோண்டப்பட்டது. 13 பேரின் மனித எலும்புக்கூடுகள் எடுக்கப்பட்டன.

ஜூலை 13 - புதைகுழியை தோண்டுவது தொடர்பில் நீதிமன்றில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. இதில், ஜூலை 20இல் புதைகுழியை தோண்ட முடிவு செய்யப்பட்டது.

ஜூலை 20 - நிதி இல்லாததால் புதைகுழியை தோண்டுவதை கைவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

ஜூலை 28 - புதைகுழியை தோண்டவும் சர்வதேச கண்காணிப்பை கோரி வடக்கு, கிழக்கில் ஹர்த்தாலும் முல்லைத்தீவில் ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

ஓகஸ்ட் 08 - புதைகுழியை தோண்ட ஜனாதிபதி பணிமனை நிதி வழங்கும் என்று காணாமல் போனோர் அலுவலகம் நீதிமன்றுக்கு அறிவித்தது. (ஐ)

## பயங்கரவாத...

சிறைக் கைதிகளை தொழில் முயற்சியில் ஈடுபடுத்தும் வேலைத்திட்டம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கு நான்கு நிறுவனங்கள் இணங்கியுள்ளன.

சந்தேக நபர்கள் மற்றும் நீதிமன்றங்களால் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகள் என தற்போது 28 ஆயிரத்து 468 சிறைக் கைதிகள் இருக்கின்றனர். சிறைக்கைதிகளில் 50.3 சதவீதமானவர்கள் போதைப்பொருள் சம்பந்தமான குற்றத்துக்காக தண்டனை பெற்றவர்கள் இருப்பதே சிறைச்சாலைகளில் தற்போது பெரும் சிக்கலாகக் காணப்படுகிறது. போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் தண்டனை பெறும் இவ்வாறான குற்றவாளிகளுக்கு தண்டைனைகளை வழங்குவது மாத்திரம் போதைப் பொருள் பிரச்னைக்குத் தீர்வாக அமையாது.

அரசாங்கம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்தி அதிகமானவர்களை சிறையில் அடைத்து வருவதாக சிலர் கூறினாலும் தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறைச்சாலைகளில் சுமார் 40 பேரே இருக்கின்றனர் என்றார்.

மேலும், சிறைச்சாலைகளில் 13 ஆயிரம் சிறைக்கைதிகளுக்கே இடவசதி இருக்கின்ற போதிலும், தற்போது சுமார் 29 ஆயிரம் கைதிகள் இருக்கின்றமை பெரும் பிரச்னையாகக் காணப்படுகிறது - என்றும் கூறினார். இதனால் சிறைச்சாலைகளின் செலவைக் குறைக்கும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்களை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ஐ)

## அறகலயவால்...

சேதம் 91 ஆயிரம் ரூபாய், யன்னல் கண்ணாடிகளுக்கான சேதம் 45 ஆயிரம் ரூபாய், கதவு பூட்டுகளின் சேதம் 80 ஆயிரம் ரூபாய், ஜன்னல் பூட்டுகளின் சேதம் 16 ஆயிரம் ரூபாய், மின் கதவுகளுக்கு ஏற்பட்ட சேதம் ரூ. 56 ஆயிரம், புல் தரைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதத்தின் மதிப்பு ரூ. 14 இலட்சமாகும்.

மொத்தமாக 33 இலட்சம் ரூபாய் மதிப்பிலான சொத்துகளுக்கு சேதங்கள் ஏற்படுத்தப்பட்டன. பணவீக்கத்தைக் கருத்தில் கொள்ளும் போது அவற்றின் இப்போதைய பெறுமதி 56 இலட்சம் ரூபாயாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், 55 மேசைகள் மற்றும் கதிரைகள், 18 வாங்குகள், ஒரு கைகழுவுமிடம், யன்னல் கண்ணாடி, பத்து கதவு பூட்டுகள், 18 ஜன்னல் பூட்டுகள், 8 மின்சார கதவுகள் மற்றும் 14 ஆயிரம் சதுர அடி புல்தரை ஆகியவை போராட்டகாரர்களால் அழிக்கப்பட்டுள்ளன என அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## ஆறுகால்மடத்தில்..

செய்யப்படுகின்றன.

இவ்வாறு புதைக்கப்படும் சடலங்களை நாய்கள் இழுத்து வந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டனர். அங்கு பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டிருந்தபோது நாயொன்று சிசு ஒன்றின் கையை கௌவியபடி வந்துள்ளது.

தொடர்ந்து நடந்த ஆய்வில் அந்தப் பகுதிகளில் பல சிசுக்களின் உடல் பாகங்கள் காணப்பட்டன.

சிசுக்களின் சடலங்களை சரியான முறையில் புதைக்கப்படாததாலேயே இவ்வாறான சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## சிறுமிகள்...

வயது குற்றவாளிக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அத்துடன், சிறுமியை கடத்தியதற்காக 10 ஆயிரம் ரூபாய் தண்டமும் தண்டப்பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் 12 மாத மாத கால சாதரண சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

மேலும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கவும், தவறின் 12 மாத கால சாதரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதேநேரம், 2015ஆம் ஆண்டு 15 வயது சிறுமியை 18 வயது இளைஞர் காதலித்து கடத்தி சென்று திருமணம் செய்து குடும்ப வாழ்க்கை நடத்தியுள்ளார். இந்தக் குற்றச்சாட்டில் கைதான நபருக்கும் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

சிறுமியின் சம்மதத்துடன் குற்றவாளி அவருடன் குடும்பம் நடத்தியுள்ளார். எனினும், குற்றவாளி 18 வயதில் இழைத்த இந்தக் குற்றத்தை குற்றமென அறியாது செய்துள்ளார். இதனால், அவருக்கு எதிரான 4 குற்றச்சாட்டுகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் 40 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்தவும் தவறும் பட்சத்தில் 6 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. மேலும், சிறுமியை துஷ்பிரயோகம் செய்த குற்றத்துக்கு 10 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட இரண்டு வருட கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இந்த இரு வழக்குகளும் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நீதிபதி ஏ. எம். ஏ. சகாப்தீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு தீர்ப்புகள் வழங்கப்பட்டன. (ஐ)

## பல்கலை...

முன்மொழியப்பட்ட தொழிலாளர் சட்டம், ஊழியர் வருங்கால வைப்பு நிதி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகிய முன்மொழிவுகள் தொடர்பான விடயங்கள் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்தும் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கிருலப்பனை மற்றும் நகர மண்டப பகுதிகளில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை நீர்த்தாரை பிரயோகம் செய்து பொலிஸார் விரட்டினர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்பின் சில பகுதிகளுக்குள் நுழைய தடை விதித்து கோட்டை மற்றும் மாளிகா கந்தை நீதிமன்றங்கள் நேற்று உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பொருளாதார...

மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையின் பொருளாதாரத்துக்கு ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட போட்டி பொருளாதாரம் மட்டுமின்றி அபிவிருத்தி செய்வதற்கு தனியார் துறைக்கு திறந்த பொருளாதாரம் அவசியம். பொருளாதாரம் வேகமாக முன்னேற, நிதி மற்றும் மனித மூலதனம் இருக்க வேண்டும்.

இலங்கை 1977 இல் பொருளாதாரத்தை திறந்து மூலதனத்தை ஈட்ட முயற்சித்தது. அதனால் இலங்கைக்கு பல்வேறு வெளிநாட்டு முதலீடுகளும் கிடைத்தது. துரதிஷ்டவசமாக எமது நாட்டில் யுத்தமொன்று ஏற்பட்டது. இருப்பினும் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் நிறைவு பெற்ற பின்னர் மெதுவாக பொருளாதாரம் மீண்டெழுந்தது.

அதன் பின்னர் 2021 - 2022களில் கொரோனா பரவலின் பின்னர் பொருளாதாரத்தில் சரிவு ஏற்பட்டது. நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலையை அடைந்தது. 2019 இல் நாட்டின் பொருளாதாரம் காணப்பட்ட நிலைக்கும் தற்போதுள்ள நிலைமைக்கும் மிகப் பெரிய இடைவெளி காணப்படுகின்றது. எவ்வாறாயினும், 2019இல் இருந்த நிலைமைக்கு நாடு வந்துகொண்டிருக்கிறது என்பதை கூற வேண்டும்.

வலுவான போட்டித்தன்மை மிக்க பொருளாதாரத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும். அதேபோல் தனியார் துறையை முதன்மைப்படுத்திய பொருளாதாரம் இருந்தால் பொருளாதாரச் சரிவு ஏற்படாது. எமக்கு வெளிநாட்டு மூலதனம் தேவைப்படுகிறது. வெளிநாட்டு மூலதனங்களை ஈட்டும் அளவான வளர்ச்சியை நாம் அடைந்து கொள்ள வேண்டும். முதலீடு செய்யும் ஒவ்வொரு டொலருக்கும் பதிலாக மற்றுமொரு டொலரை சம்பாதித்து கொள்வதே இலக்காக இருக்க வேண்டும். இதனாலேயே முதலீட்டுச் சபை மற்றும் ஏற்றுமதிச் ஊக்குவிப்புச் சபை ஆகியவற்றுடன் இணைந்து புதிய பொருளாதார ஆணைக்குழு ஒன்றை நிறுவ எதிர்பார்த்துள்ளோம்.

தெற்காசியாவின் அனைத்து நாடுகளுடனும் எமக்கு பெரும் போட்டி காணப்படுகிறது. அதற்கு நாம் தயாராக இல்லாவிட்டால் துரித அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாது. துரித அபிவிருத்தி அடையும் வலுவான போட்டித்தன்மை மிக்க பொருளாதாரம் ஒன்று எமக்கு அவசியப்படுகிறது.

இந்நாட்களில் பெருமளவானோர் நாட்டை விட்டுச் சென்றுள்ளனர். சிறந்த எதிர்காலத்தை நோக்கமாக கொண்டே அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள். குறுகிய காலத்துக்கு அது நன்மையளிப்பதாக தெரிந்தாலும், நாட்டை விட்டுச் செல்வோரில் அதிகளவானோர் சம்பாதித்துக்கொண்டு நாடு திரும்புகின்றனர். அதனால் மாத்திரம் பிரச்னைகள் தீர்ந்துவிடுவதில்லை.

மனித வள மூலதனம் போதியளவில் இல்லாமையே நாம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய பிரச்னையாக உள்ளது. அதற்காக நமது இளைஞர், யுவதிகளை பயிற்றுவிக்க வேண்டும். அதற்கான திட்டமிடல் ஒன்றும் அவசியம்.

## இந்தியாவுடனான...

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டபோது சேது சமுத்திர திட்டம், திருகோணமலை பொருளாதார வலயம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து பேசப்பட்டுள்ளன. அத்துடன் இரு தரப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பப்பட்டுள்ளன.

இந்தியா எமது அயல் நட்பு நாடு என்பதில் எவ்வித மாற்றமுமில்லை. நெருக்கடியான சந்தர்ப்பத்தில் இந்தியா முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. இருப்பினும் நாடு என்ற ரீதியில் நாட்டின் தேசிய ஆட்புல ஒருமைப்பாடு, சுயாதீனம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி செயல்பட வேண்டும். ஜனாதிபதியின் இந்திய பயணத்தின் போது கைச்சாத்திடப்பட்ட இருதரப்பு ஒப்பந்தங்கள் குறித்து இதுவரை முழுமையான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

ஆகவே, அந்த ஒப்பந்தங்களை பகிரங்கப்படுத்த முடியுமா என வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரியிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி இந்தியாவுடனான பேச்சு இலங்கைக்கு சார்பானதாகவே உள்ளது. இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் பேச்சுகளை ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் கலந்துரையாடி அமைச்சரவையின் அனுமதியுடன் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கலாம்.

பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா தற்போது ஐந்தாவது இடத்தில் உள்ளது. 2030 ஆம் ஆண்டு மூன்றாவது இடத்தை அடையவும் 2050 ஆம் ஆண்டு இரண்டாவது இடத்தை அடையவும் இந்தியா திட்டமிட்டுள்ளது. இந்தியாவின் பொருளாதார முன்னேற்றம் இலங்கைக்கு பல வழிமுறைகளில் சாதகமாக அமையும்.

வரலாற்றில் கைதியாக செயல்பட வேண்டிய அவசியம் இலங்கைக்கு கிடையாது. நாட்டுக்கு பயன்பெறும் விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளோம். இலங்கைக்கு முதலிடம் என்ற வெளிநாட்டு கொள்கையை முன்னிலைப்படுத்தி செயல்படுகிறோம் - என்றார்.

## நிலங்களை...

வேண்டும். இது மிகவும் கவலைக்குரிய நிலையாகும். பெருந்தோட்ட மக்களில் சுகாதாரம், உட்கட்டமைப்பு உள்ளிட்ட பல பிரச்னைகள் காணப்படுகின்றன. இதற்கு ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்களும் பொறுப்புக்கூற வேண்டும்.

பெருந்தோட்ட மக்களுக்கு குடியுரிமை பெற்றுக்கொடுக்க முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டார். பிற்பட்ட காலங்களில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் முன்னேற்றத்துக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டன.

பெருந்தோட்ட பகுதிகளில் தோட்ட கம்பனிகளை அடிப்படையாகக் கொண்டு பல பிரச்னைகள் தோற்றம் பெற்றுள்ளன. 50 வருடகாலமாக தோட்ட கம்பனிகளின் நிர்வாகத்தின் கீழ் தோட்டங்கள் காணப்படுகின்றன.

பலவீனமாக வரி ஒப்பந்தத்துக்கு அமையவே தோட்ட கம்பனிகள் செயல்படுகின்றன. பெருந்தோட்ட மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கும்போது தோட்ட கம்பனிகள் இணக்கப்பாடற்ற தன்மையில்தான் செயல்படுகின்றன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பெருந்தோட்ட பகுதிகளில் பாவனைக்கு பயன்படுத்தப்படாத நிலங்களை மீண்டும் அரசுடமையாக்குவதற்கு அமைச்சரவை அனுமதியை பெற்றுக்கொண்டார். இருப்பினும் பல்வேறு தடைகளால் அது சாத்தியமற்றதாகிறது. - என்றும் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மலையக மக்களுக்காக நான் கூட்டணியில் இணைய தயார்!

## மனோவிடம் தெரிவித்தார் மஹிந்தானந்த

கொழும்பு, ஓக. 11

"மலையக மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்காக மலையக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அம்மக்களுக்காக தீர்க்கமான தருணத்தில் அரசுக்கு உரிய அழுத்தத்தை பிரியோகிக்கக் கூட நான் தயாராகவே இருக்கின்றேன்." - என்று பொது ஜன பெரமுனவின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நான் 20 வருடங்களாக பாராளுமன்ற உறுப்பினராக அங்கம் வகிக்கின்றேன். பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் என்ன நடந்துள்ளது என மனசாட்சியிடம் கேட்க வேண்டும். மலையக மக்களின் பிரச்னைகள் தொடர்பில் தொடர்ந்து பேசிக்கொண்டு மட்டும் இருக்க முடியாது.

வடக்கு, கிழக்கு எம்.பிக்கள், அம்மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்காக ஒன்றிணைந்து செயற்படுகின்றனர். எனவே, மலையக எம்.பிக்களும் பிரச்னைகளை தீர்க்க ஒன்றுபட வேண்டும். அதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன். அவ்வாறு இல்லாவிட்டால் அடுத்த 200 வருடங்களிலும் மலையகத்தில் மாற்றம் வராது.

பெருந்தோட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். அதற்காக மலையக எம்.பிக்கள் ஒன்றிணைய வேண்டும் என மீண்டும் அழைப்பு விடுக்கின்றேன். கூட்டணி ஒன்றை அமைக்கவும், அதில் நானும் பத்து பதினைந்து பேருடன் வந்து இணைவதற்கு தயார்-என்றார்.

# மிருக வதைச் சட்டத்தின் கீழ் கிளிநொச்சியில் மூவர் கைது!

கிளிநொச்சி, ஓக. 11

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகேந்திரபுரம் பகுதியில் 20 கால்நடைகளைப் பார ஊர்தி ஒன்றில் கொண்டு சென்ற மூவரைப் பொலிஸார் நேற்று மிருக வதைச் சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளனர். அத்துடன் குறித்த கால்நடைகளையும் பொலிஸார் மீட்டனர்.

உரிய கால்நடை வைத்தியரின் அனுமதிப்பத்திரம் இன்மை, கால்நடைகளுக்கான உணவு மற்றும் சுகாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் இக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

# மிலிந்த மொறகொடவின் சேவைக்காலம் முடிகிறது

கொழும்பு, ஓக. 11

புதுடில்லியில் உள்ள இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட தனது பதவிக் காலத்தை முடித்துக் கொண்டு ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில் இலங்கை திரும்பவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தனது பதவியில் இருந்து விலகுவதற்கான தூதுவரின் தீர்மானம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மிலிந்த மொறகொட 29 ஓகஸ்ட் 2021 அன்று இந்தியாவிற்கான இலங்கையின் தூதுவராக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டார்.

மொறகொட அமைச்சரவை அதிகாரங்களைக் கொண்ட தூதுவராக நியமிக்கப்பட்டதுடன், இலங்கையில் அமைச்சரவை அதிகாரங்களுடன் நியமிக்கப்பட்ட முதலாவது தூதுவர் இவரே என்பதும் விசேட அம்சமாகும்.

மிலிந்த் மொறகொட தனது பதவிக்காலத்தில் "ஒருங்கிணைந்த தேசிய மூலோபாயம்" என்ற திட்டத்தையும் நடைமுறைப்படுத்தினார்.

அவர் தனது பதவி காலத்தில் இலங்கை மற்றும் இந்தியாவின் மின் கட்டங்களை இணைப்பது உட்பட, இந்தியாவுடனான இருதரப்பு உறவுகளை மேம்படுத்த ஒரு விரிவான மூலோபாயத்தை உருவாக்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)







# நல்லூர் பெருந்திருவிழா: காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 11

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை காலை கல்வியங்காட்டில் இடம்பெற்றது.

வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தற்கால் நாட்டுதல் நடைபெற்று பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் செங்குந்த மரபுடையவர்களுக்கான காளாஞ்சி ஒற்றை திருக்கை மாட்டுவண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன.

ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இந்தியாவால் வழங்கப்பட்ட நிதியை மலையக கல்விக்காக பயன்படுத்துக!

## தமிழ் முற்போக்கு கூட்டணி கோரிக்கை

கொழும்பு, ஓக. 11

இந்தியாவினால் வழங்கப்பட்ட 3000 மில்லியன் ரூபாவை மலையகத்தின் கல்விக்காக பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையினை தமிழ் முற்போக்கு கூட்டணி பாராளுமன்றில் முன்வைத்துள்ளது.

பெருந்தோட்டத்துறை தொடர்பான, சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை நேற்று முன்வைத்து பாராளுமன்றில் உரையாற்றும்போதே தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இதனைத் தெரிவித்தார்.

குறித்த நிதியை உட்கட்டமைப்பு, வீடமைப்பு போன்ற செயற்பாடுகளுக்கு பயன்படுத்தாது, முழுமையாக மலையகத்தின் கல்வி வளர்ச்சிக்காக மாத்திரமே பயன்படுத்தப்படவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்கும், மலையக மக்கள் தற்போது, பொருளாதாரம், சமூக, கல்வி உள்ளிட்ட விடயங்களில் பின்தங்கியவர்களாகவே இருக்கின்றனர்.

இந்த விடயங்களிலே அவர்களுக்கான உரிமைகள் உரிய வகையில் வழங்கப்படாதுள்ளன. இது பாரிய அநீதியாகும்.

தாய் மொழியினை பயன்படுத்துவதில் கூட அவர்கள் சிக்கலை எதிர்நோக்கியுள்ளனர்.

நாம் இந்திய பிரஜைகள் அல்ல இலங்கை பிரஜைகளே, எனவே இந்த விடயத்தில் கட்சி வேறுபாடுகள் இன்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

இரத்தினபுரி, காலி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு புதிய பிரதேச செயலகங்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்று வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியிருந்தது.

தற்போதைய அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர், இரத்தினபுரி மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கு புதிய பிரதேச செயலகங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தும், நுவரெலியா மாவட்டம் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் எமக்கு பகுதியளவிலேயே குடியுரிமை வழங்கப்பட்டுள்ளமை தெளிவாகின்றது.

எனவே ஒதுக்கப்பட்ட சமூகமாக இன்றி, இலங்கையின் தேசிய இனமாக பெருந்தோட்டத்துறையினரும் அங்கிகரிக்கப்பட வேண்டும் - என்றார். (அ)

# பிரசன்ன - தயாசிறி இடையே சபையில் கடும் வாக்குவாதம்





கொழும்பு, ஓக. 11

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்துக்கு தெரிவான அங்கஜன் இராமநாதனுக்கு பாராளுமன்ற நடவடிக்கைகள் குழுவில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளதாக அரச தரப்புகொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை சுதந்திரக் கட்சியின் செயலாளரும் எம்.பி.யுமான தயாசிறி ஜயசேகர பாராளுமன்ற நடவடிக்கைகள் குழுவில் தமது கட்சிக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என்ற கருத்துக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இப்பிரச்னை தொடர்பில் தயாசிறி ஜயசேகர எம்.பி.கூறுகையில்-

முன்னாள் ஜனாதிபதிக்கு புதன்கிழமை பேசுவதற்கு ஏழு நிமிடங்கள் மட்டுமே வழங்கப்பட்டன. இறுதியில் இரண்டு மூன்று நிமிடம் பேசக் கிடைத்தது. இப்பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படாததால் புதன்கிழமை ஐந்து முறை இந்த சபையில் 'கோரம்' கேட்க வேண்டியேற்பட்டது. பாராளுமன்ற நடவடிக்கைகள் குழுவில் சுதந்திரக் கட்சிக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கத்துடன் தொடர்பில் இருப்பவர்களுக்கு அவ்வாறான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் சுதந்திரக் கட்சிக்கு அவ்வாறான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எதிர்க்கட்சி அரசியல் செய்ய சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது. எனவே எங்களுக்கு அந்த வாய்ப்பை கொடுங்கள்-என்றார்.

இது தொடர்பில் சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ கூறுகையில் - இதுபற்றி நாளை பாராளுமன்ற நடவடிக்கை குழுவில் பேசுவோம் - என்றார்.

இதன்போது, எழுந்த அரச தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க , நான் வெளியிட்ட கருத்து தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர பேசினார்.

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மாத்திரமே சுதந்திரக் கட்சியிலிருந்து பாராளுமன்றத்திற்கு வந்திருந்தார். அவர் இந்த குழுவில் உள்ளார். எனினும் சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி ஆளும் கட்சியில் அமர்ந்துள்ள அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோருக்கும் அந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழுவில் எதிர்க்கட்சி பிரதிநிதித்துவம் பெறவில்லை என்றால், அது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவருடன் பேசி அந்தப் பிரச்னையை தீர்த்துக்கொள்ள வேண்டும்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.